Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 30, 2021

செவ்வாய்க்கிழமை 30, 2021 | ஒளி: 07 கதிர் 166 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ FREE

எரிபொருள் இல்லை என்றால்

நாட்டில் மின்தடை ஏற்படும்

பா.நிரோஸ்

எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியாது போனால், நாட்டில் மின்சாரத் தடை ஏற்படும் எனத் தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, இதனால் நாட்டின் பொருளாதாரம் பாரியவில் பாதிக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

ஒமிக்ரான் ஆபத்தானது

உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடான ஒமிக்ரான், சர்வதேச அளவில் பரவ வாய்ப்புள்ளது என்றும் உலகளாவிய ரீதியில் மிகவும் அதிக ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம், கொரோனா மாறுபாடு அதிகரிப்பு, சில பகுதிகளில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும், நேற்று (29) எச்சரித்தது.

தொடர்ச்சி P2

ஜப்பானும் எல்லைகளை மூடியது

15 நாடுகளில் ஒமிக்ரான் அடையாளம்

தென்ஆபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரான் கொரோனா மாறுபாட்டின் அச்சத்தால், நேற்று முன்தினம் (28) முதல் இஸ்ரேல், தமது எல்லைகளை மூடியிருந்த நிலையில், ஜப்பானும் தமது எல்லைகளை இன்று (30) முதல் மூடவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

இந்தியாவில் அகதியானோம்

சொந்தக் காணிகளை மீட்டுத் தாருங்கள்

83 குடும்பங்கள் மன்றாட்டம்

எம்முபாரக்

திருகோணமலை, மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 4ஆம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மக்கள், தங்களுடைய சொந்தக் காணிகளை தமக்கு மீட்டுத் தருமாறு கோரி, திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நேற்று (29) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

பொங்கும் சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கு மறுப்பு



ரஞ்சித் ராஜபக்ஷ

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தல், காஸ் அடுப்புகள் வெடித்தல் மற்றும் இணைப்பு குழாய்கள் வெடித்தல் என நாளாந்தம் சம்பவங்கள் இடம்பெற்று கொண்டே இருக்கின்றன.

இந்நிலையில், புதிதாக கொள்வனவு செய்யப்படும் சிலிண்டர்களில் காஸ் கசிவு ஏற்படுகின்றது என, நுகர்வோர் தெரிவித்தனர். ஹட்டனில் காஸ் விற்பனைச் செய்யும் நிலையங்கள், நேற்று முன்தினம் (28) கொள்வனவு செய்யப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களில் இவ்வாறு கசிவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

233

சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் பதிவு

சபைக்கு அறிவித்தது அரசாங்கம்

பாரதி ரோஸ்

2015ஆம் ஆண்டு முதல் லிட்ரோ, லாஃப் சமையல் எரிவாயு நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட 233 சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியுள்ளன எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, தற்போது சமையல் எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்பு சம்பவங்கள் அதிகரித்திருப்பதை ஏற்றுகொள்வதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இவ்வாறு பலவீனமான அரசாங்கம் இல்லை

முகாமைத்துவம் இல்லாத அரசாங்கமொன்று இந்த நாட்டுக்கு கிடைத்துள்ளதன் பெறுபேறே, தற்போது பாண் உள்ளிட்ட விலைகளின் அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, இவ்வாறான மக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்த, பலவீனமான அரசாங்கத்தை எமது வாழ்நாளில் ஒருநாளும் கண்டதில்லை என தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

விலகினார் ரணதுங்க

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகுவதாக முன்னாள் அமைச்சரும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான, அர்ஜுன ரணதுங்க அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், செயலாளர், பிரதித் தலைவர், உப0 தலைவர் ஆகியோருக்கு நேற்று (29) அறிவித்துள்ளார்.

சீ.ஐ.டிக்கு பயந்து நால்வர் சரணடைவு

செந்தூரன் பிரதீபன்

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுத் துறையினர் தம்மை கைது செய்வார்கள் என்ற அச்சத்தில், தலைமறைவாகியிருந்தவர்கள் இறுதியில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

கோதுமை மா விலை அறிவிப்பு

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 17 ரூபாய் 50 சதத்தினால் அதிகரித்துள்ளதாக, பிறீமா மற்றும் செரெண்டிப் ஆகிய நிறுவனங்கள், நேற்று (29) அறிவித்தன.

நேற்று முதல் தமது விலை அதிகரிப்பு அமுலாவதாக செரெண்டிப் நிறுவனமும் கடந்த சனிக்கிழமை (27) முதல் அமுலாகும் வகையில் விலை அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பிறீமா நிறுவனமும் அறிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

சிலிண்டர் வெடிப்பு விவகாரம்;

பொய் சொன்ன அதிகாரிகளை கைது செய்க

பா.நிரோஸ்

சமையல் எரிவாயு சிலிண்டரின் தர நிர்ணயம் உறுதி செய்யப்படவில்லை என கூறுவதை ஏற்க முடியாது என்று தெரிவித்த எதிர்க்கட்சி எம்.பி முஜிபூர் ரஹ்மான், இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து அதிகாரிகளையும் சி.ஐ.டியினர் கைது செய்ய வேண்டும்

தொடர்ச்சி P2

மகளிடம் சேஷ்டை புரிந்தவர் ஒற்றைக் காதை இழந்தார்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

வீட்டில் உறவினர்கள் இல்லாத சமயத்தில், 12 வயது மதிக்கத்தக்க மகளிடம் சேஷ்டை புரிந்தவரின் காது அறுக்கப்பட்ட சம்பவமொன்று, கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில், நேற்று முன்தினம் (28) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

ரூ.10,000 சம்பளம் கோரி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

சுற்றறிக்கையை இரத்து செய்யுமாறு வலியுறுத்து

அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழக்குமாறு கோரி, இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் சங்கம், மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு முன்பாக, நேற்று (29) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், நாடளாவிய ரீதியிலும் சம்பள அதிகரிப்புக் கோரி, அரச ஊழியர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

அமீரகம் செல்கிறார் ஜனாதிபதி கோட்டா

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் அபுதாபியில் அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள இந்து சமுத்திர மாநாட்டில் தலைமை உரையாற்றுவதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்ததுடன், டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி, ஐக்கிய அரபு அமீரகத்தின் அரச தலைவரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர்

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கக் கூடாது

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, சில கொள்கை ரீதியான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியதாகத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், இதை செயற்படுத்தவே ஏனைய கட்சிகள் எம்முடன் கூட்டிணைந்தன. அதற்காகவே மக்கள் வாக்களித்து அதிகாரங்களை வழங்கினர் என்றார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

யுகதனவி விவகாரம்

டிசெம்பர் 16இல் பரிசீலனை

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான ஒப்பந்தங்களை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமை மீறல் மனுக்களை எதிர்வரும் 16ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு, உயர்நீதிமன்றம், நேற்று (29) தீர்மானித்தது.

இந்த மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, எல்.டி.பி. தெஹிதெனிய ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

ஒமிக்ரான் ஆபத்தானது

உயர் முன்னுரிமை குழுக்களுக்கு தடுப்பூசிகளை விரைவுபடுத்தவும் மற்றும் அத்தியாவசிய சுகாதார சேவைகளை பராமரிக்க தணிப்பு திட்டங்கள் நடைமுறையில் இருப்பதை உறுதிப்படுத்தவும் ஐக்கிய நாடுகள், தனது 194 உறுப்பு நாடுகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனையில் வலியுறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகளை ஒமிக்ரான் கொண்டுள்ளதால், அவற்றில் சில தொற்று நோயில் ஏற்படுத்தும் சாத்தியமான தாக்கத்தைப் பற்றி கவலை கொள்வதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

புதிய மாறுபாடான ஒமிக்ரானின் ஒட்டுமொத்த உலகளாவிய ஆபத்து மிகவும் அதிகமாக மதிப்பிடப்படுகிறது என்றும் தடுப்பூசிகள் மற்றும் முந்தைய நோய்த்தொற்றுகளால் தூண்டப்பட்ட நோய் எதிர்ப்பு சக்திக்கு எதிரான பாதுகாப்பிலிருந்து தப்பிக்க ஒமிக்ரானின் திறனை நன்கு புரிந்து கொள்ள மேலதிக ஆராய்ச்சி தேவை என்றும் தெரிவித்துள்ள ஸ்தாபனம், எதிர்வரும் வாரங்களில் கூடுதல் தரவுகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐப்பானும் எல்லைகளை மூடியது

ஜப்பானில் ஒரு மோசமான சூழ்நிலையைத் தடுக்க அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று தெரிவித்துள்ள ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, இந்த நடவடிக்கை செவ்வாய்கிழமை (30) அமுலுக்கு வரும் என்றும் குறிப்பிட்டார்.

குறுகிய கால வணிக பார்வையாளர்கள், வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக இந்த மாத தொடக்கத்தில் தளர்த்தப்பட்ட எல்லைக் கட்டுப்பாடுகளை ஜப்பான் மீண்டும் அமுல்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஒமிக்ரான் மாறுபாட்டின் மேலதிக விவரங்கள் அறியப்படும் வரை முகக் கவசங்களை அணிதல் மற்றும் ஏனைய அடிப்படை வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளைத் தொடருமாறு ஜப்பான் பிரதமர், மக்களை வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸின் ஏனைய மாறுபாடுகளை விட புதிய மாறுபாடு மிகவும் ஆபத்தானதா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று விஞ்ஞானிகள் எச்சரித்தாலும், பல நாடுகள் தங்கள் எல்லைகளைக் கட்டுப்பாடுகளைத் தீவிரப்படுத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

இதேவேளை, தென்ஆபிரிக்கா, போட்ஸ்வானா, ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து, ஜேர்மனி, ஹொங்ஹொங், இத்தாலி, பெல்ஜியம், இஸ்ரேல், டென்மார்க், ஒஸ்ரியா, செக் குடியரசு, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஸ்காட்லாந்து ஆகிய 15 நாடுகளில் ஒமிக்ரோன் பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நாட்டில் மின்தடை ஏற்படும்

பாராளுமன்றத்தின் நேற்றைய (29) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் உணவுப் பொருள் தட்டுபாடு போல, எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படும். கடந்த வெள்ளிக்கிழமை வரையில் அந்நிய செலாவணியாக நாட்டில் காணப்பட்ட டொலர்கள், தங்க நகைகளின் பெறுமதிகளை டொலர்களில் சர்வதேச நாணய நிதியத்துக்கு இலங்கை மத்திய வங்கி அனுப்பியிருக்கும். இந்தத் தகவல்களை சபாநாயகர் அல்லது இராஜாங்க அமைச்சர்கள் அந்த வங்கியிடமிருந்து பெற்று சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என ரணில் வலியுறுத்தினார்.

இதனை அடிப்படையாக வைத்தே, நாட்டின் எரிபொருள் நிலைமைகள் தொடர்பில் பேச முடியும். போதிய நிதி இல்லை என்றால் நாட்டுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாது. எரிபொருளை இறக்குமதி செய்ய முடியவில்லை என்றால் நாட்டில் மின்சாரத் தடை ஏற்படும் எனவும் எச்சரித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, நாட்டில் தற்போது மின்சார தடை இல்லை என்றார்.

நாட்டின் மின்சாரத் தடை ஏற்பட்டால் வீட்டில் உள்ளவர்களுக்கு நெட்பிளிக்ஸ் பார்க்க முடியாது. ஆனால், தொழிற்சாலைகளை இயக்க முடியாது. இதனால் பொருளாதாரத்தை முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும் என ரணில் கூறினார்.

சொந்தக் காணிகளை...

1983ஆம் ஆண்டு, தமது சொந்த காணிகளை விட்டு வெளியேறி, இந்தியாவிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்து வந்ததாகவும் தற்போது தங்களுடைய காணிகளுக்குள் செல்லவிடாமல் தடுப்பதால், தமக்குரிய காணிகளை அரச அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டுமென அவர்கள் கோரினர்.

யுத்த காலத்தின் போது 83 குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் காணிகள் கைவிடப்பட்ட நிலையில், தற்போது அக்காணிகளில் வேறு பிரதேசங்களிலிருந்து வந்தவர்களால் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

தமக்கு உரிய ஆதாரங்கள் காணப்படுகின்ற போதிலும், மொரவெவ பிரதேச செயலக அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்தவில்லையெனவும் தமிழ் மக்களுக்குரிய காணிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

குறித்த காணிகள் தொடர்பில், திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் தர்ஷன பாண்டி கோரள, விசாரணைகளை மேற்கொண்டு, எதிர்வரும் டிசெம்பர் 30ஆம் திகதிக்குள் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொங்கும் சிலிண்டர்களை...

கொள்வனவு செய்யப்படும் காஸ் சிலிண்டரை வீட்டுக்குக் கொண்டுச் சென்று, அதன் சீல் அகற்றப்பட்டதன் பின்னர் மூடியையும் திறந்தே, காஸ் அடுப்புடன் பொறுத்தவேண்டும். அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட 12.5 கிலோகிராம் நிறையைக் கொண்ட காஸ் சிலிண்டரில், கசிவு ஏற்பட்டுள்ளது.

அந்த சிலிண்டரை கொள்வனவு செய்த காஸ் நிலையம் அல்லது கடைக்கே கொண்டுவந்து, நுகர்வோர் மீளவும் கொடுத்துள்ளார். எனினும், கசிவு ஏற்படும் சிலிண்டர்களை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு நிறுவனங்கள் தங்களுக்கு எந்தவிதமான அறிவுறுத்தல்களையும் விடுக்கவில்லையென விற்பனைச் செய்தவர்கள் தெரிவித்துள்ளனர் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

233 சிலிண்டர் வெடிப்பு...

மேலும் எரிவாயு வெடிப்புகளுக்கு நீண்டகால குறுகிய கால தீர்வுகளை மொரட்டுவை பல்கலைக்கழகம் இவ்வாரம் வழங்க உள்ளதாகவும், எரிவாயுக்களை பரிசோதனை செய்யும் ஆய்வுகூடங்கள் இலங்கையில் இல்லை எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றித்தின் நேற்றைய (29) அமர்வில் கலந்துகொண்டு அமைச்சின் அறிவிப்பை வெளியிட்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

சமையல் எரிவாயு வெடிப்பு சம்பங்கள் தொடர்பில் சபையில் தொடர்ந்து பேசப்படுகிறது. இதனை நிறுத்த வேண்டும் என்பதே எமது விருப்பம். 2015ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் இறுதி வரையில், லிட்ரோ, லாஃப் சமையல் எரிவாயு நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட 233 சிலிண்டர்கள் வெடித்து சிதறியுள்ளன என சுட்டிக்காட்டினார்.

தற்போது சிலிண்டர் வெடிப்புக்கள் குறுகியக் காலத்துக்குள் அதிகரித்துள்ளது என்பதை ஏற்றுகொள்கிறோம். சில மாதங்களுக்கு முன்பு லிட்ரோ நிறுவனம் 18 லீற்றர் சிலிண்டரை சந்தைக்கு அறிமுகப்படுத்தியது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு நுகர்வோர் அதிகாரசபை தங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தது என்றார்.

சமையல் எரிவாயுவின் தரம் தொடர்பில் பரிசோதிப்பதற்கு பல்வேறு அரச நிறுவனங்களுக்குப் பொறுப்புகள் இருக்கின்றன. எனினும், இதுவரையில் எந்தவொரு நிறுவனங்களும் சமையல் எரிவாயுவின் தரங்களை பரிசோதனை செய்ததில்லை. எனது அமைச்சுக்குக் கீழ் உள்ள நுகர்வோர் அதிகாரசபைக்கும் இந்த பொறுப்புக்கள் இருக்கின்றன. எனினும் 2011ஆம் ஆண்டுவரையில் நுகர்வோர் அதிகாரசபையும் நூற்றுக்கு நூறு சதவீதம் பரிசோதனைகளை செய்ததில்லை எனவும் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு ஆய்வுகூடமும் இலங்கையில் இல்லை. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெற்றுகொள்ளப்பட்ட 11 சமையல் எரிவாயு மாதிரிகள் தொடர்பான பரிசோதனைகளை பெற்றோலியக் கூட்டத்தாபனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பரிசோதனை அறிக்கை மொரட்டுவை

பொய் சொன்ன...

சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன பாராளுமன்றத்தில் விளக்கமளித்தபோது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், சிலிண்டரின் கலவையின் அளவில் மாற்றம் செய்திருப்பது தொடர்பில் தர நிர்ணய நிறுவனங்கள் உறுதிசெய்யவில்லை இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்.

ஆனால், 12.5 கிலோ கிராம் சிலிண்டரில் இருக்கவேண்டிய இரசாயன அளவு தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் அனில் கொஸ்வத்த, நுகர்வோர் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி இருக்கும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் புறொபேன் 20 சதவீதமும் பியூட்டேன் 80 சதவீதமும் இருக்கவேண்டும் தெரிவித்திருக்கிறார் எனவும் கூறினார்.

நுகர்வோர் அதிகாரசபையால் இதுதொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் இரசாயன கூறுகள் இரண்டும் 50:50 என உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் இருந்து இதன் அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை இதனூடாக உறுதியாகிறது என்றார்.

இதுவொரு பாரிய மோசடி, அரசாங்கம் மக்களின் உயிருடன் விளையாடுகிறது. சிலிண்டர் தொடர்பில் போலியான தகவல்களை வெளியிடும் அதிகாரிகள் சி.ஐ.டியினர் கைது செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு பலவீனமான...

இலங்கையிலுள்ள மத்திய தர குடும்பத்தினரும், ஏழைகளும் அன்றாடம் உழைத்து பசியை ஆற்றக் கூடிய குறைந்த தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாதளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

இவ்வாறு பிரச்சினை, துயரத்துக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து வரும் நிலையில், பாண் உள்ளிட்ட பொருள்களின் விலை அதிகரிப்பானது மேலும் அந்த மக்களை துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது என்று குறிப்பிட்டார்.

ஆனால், இந்த அரசாங்கத்தில் உள்ளவர்கள் அது குறித்து அமைதியாகவே உள்ளனர். மக்களின் துயரங்களைப் புரிந்து கொள்ளவில்லை. குறைந்தது இந்த விலை அதிகரிப்பு தொடர்பாக தமது கவலையையேனும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்த அவர், இந்த அரசாங்கத்துக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லாதது போல் இருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம், சில முக்கிய அரசியல் தீர்மானங்கள், முக்கிய விடங்களை முன்னெடுக்கும் போது, எதிர்காலத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காது எனத் தெரிவித்த அவர், எமக்கு கிடைத்த தகவலுக்கமைய மைத்திரிபால சிறிசேனவும் அவரது குழுவும் அரசாங்கத்தின் அரசியல் செயற்பாடுகளை அனுமதிக்கும் நிலையில் இல்லை என்றார்.

அதேபோல், அரசாங்கத்தில் உள்ள சில விதண்டாவாதிகள், இந்த 2, 3 வருடங்களில் சிறப்புச் சலுகைகளை அனுபவித்தனரே தவிர நாட்டுக்கு எதனையும் செய்யவில்லை என சுட்டிக்காட்டினார்.

எனவே, அவர்களுக்கு மூன்றிலிரண்டும் தேவையில்லை. 69 இலட்சமும் தேவையில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும் தேவையில்லை. தமது தனிப்பட்ட சிறப்பு சலுகைகள் மாத்திரமே அவர்களுக்குத் தேவை என தெரிவித்த அவர், இவ்வாறான மக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்த, பலவீனமான அரசாங்கத்தை எமது வாழ்நாளில் ஒருநாளும் கண்டதில்லை என்றார்.

சீ.ஐ.டிக்கு பயந்து...

கடந்த 19ஆம் திகதி உடுவில் அம்பலவாணர் வீதி பகுதியிலுள்ள வீடொன்றுக்கு பெட்ரோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்த நால்வரும் தேடப்பட்டு வந்திருந்தனர்.

ஏற்கெனவே, கடந்த வாரம் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாளொன்றும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

இந்த சம்பவத்துடன், அறுவர் தேடப்பட்டுவருவதாக தெரியவந்ததை அடுத்து, மிகுதி நால்வர் தேடப்பட்டு வந்திருந்தனர்.

இந்நிலையிலேயே, யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு துறையினருக்கு (சீ.ஐ.டி) அஞ்சி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று (29) சரணடைந்தனர்.

ரூ.10,000 சம்பளம் கோரி...

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் சம்பளத்தை உயர்த்து மாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டதுடன், தற்போது பொருட்களின் விலையேற்றம் கடுமையாக அதிகரித்திருப்பதால், மாதாந்தச் சம்பளம் போதுமானதாக இல்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, இன்றைய (நேற்றைய) ஆர்ப்பாட்டம் தொழிற்சங்க நடவடிக்கைக்கான ஒரு படியாகும் என்று, கண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சங்கத்தின் தலைவர் சுமித் கொடிகார தெரிவித்தார்.

பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர்களின் சுமையை குறைக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 10,000 ரூபாய் டுப்பணவு வழங்கப்பட வேண்டுமென கொடிகார கோரியுள்ளார்.

சமூக ஊடகங்களில் அரச ஊழியர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்கும் வகையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கை திரும்பப் பெறப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமையாக இருப்பதாக நிதியமைச்சர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும், ஓய்வுபெறும் வயதை 65 ஆக உயர்த்தும் தீர்மானத்தை இரத்து செய்ய வேண்டும் எனவும் கொடிகார வலியுறுத்தியுள்ளார்.

கோதுமை மா...

இதேவேளை, பாண் மற்றும் கொத்துரொட்டியின் விலையை 10 ரூபாயினாலும், ரோல்ஸ், மரக்கறி ரொட்டி, முட்டை ரொட்டி, பராட்டா உள்ளிட்ட சிற்றுண்டிகளின் விலையை 5 ரூபாயினாலும் அதிகரிக்கவுள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் ஆகியன அறிவித்திருந்தன.

28ஆம் திகதி முதல் பாணின் விலையும் நேற்று (29) முதல் ஏனைய சிற்றுண்டிகளின் விலையும் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும், சில இடங்களில் பழைய விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாக அறியமுடிகிறது.

அமீரகம் செல்கிறார்...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த சம்மேளனத்தின் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்படுவதுடன், உப தலைவர்களாக இந்தியா, சிங்கப்பூர், ஓமான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த மாநாட்டின் இந்த வருடத்துக்கான தொனிப்பொருள்" சுற்றாடல், பொருளாதாரம் மற்றும் தொற்று" என தெரிவித்த அவர், இந்த மாநாடானது இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாக அமையவுள்ளது என்றார்.

ஐ.நாவின் விசேட தூதுவரும் இலங்கைக்க வருகைத் தந்து, தமது அமைச்சுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்தார் என்றார்.

மகளிடம் சேஷ்டை...

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை, தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், வெட்டப்பட்ட வாளையும் மீட்டுள்ளனர்.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கக்...

நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால் கலங்கிய குட்டையில் மீன்பிடிக்கும் செயற்பாட்டை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முன்னெடுத்து செல்கிறது. குறிப்பாக உர விடயத்தில் வெற்றியடைந்திருந்தால் மைத்திரிபால சிறிசேன வெளியே வந்து, தன்னுடைய பதவி காலத்திலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது என முதலில் தெரிவித்திருப்பார். இதில் தவறு நடந்தால் இதற்கு எதிராக கதைக்கின்றார். இது கூட்டணி கட்சிக்குள் இருக்க கூடாத பண்பு என, தெரிவித்தார்.

எனவே, எம்முடன் கூட்டணி அமைத்துள்ள கட்சியிலிருப்பவர்கள், எமது சுபீட்சத்தின் நோக்கு என்ற கொள்கைகளைச் செயற்படுத்தவதை அனுமதிக்க முடியாதென நினைப்பார்களாயின் அவர்கள் அதிலிருந்து விலகுவதான் சிறந்தது என்று குறிப்பிட்டார்.

டிசெம்பர் 16இல்...

டுத்துக்கொள்ளப்பட்ட போதே டிசெம்பர் 16 மற்றும் 17 ஆகிய திகதிகளில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர், ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், மனுதாரர்கள், எதிர் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய வரும் 13ஆம் திகதி வரை அவகாசம் வழங்கியது.

மேலும், அமைச்சரவை அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தனிப்பட்ட சட்டத்தரணிகளை தக்கவைத்துக் கொண்டமையால் அவர்கள் சார்பில், சட்டமா அதிபர் ஆஜராகமாட்டார் என மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹதுன்னெத்தி மற்றும் வசந்த சமரசிங்க, கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் மற்றும் வண. எல்லே குணவன்ச தேரர் ஆகியோரே அடிப்படை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

ஒமிக்ரான் மாறுபாடு;

அடையாளம் காண வழி இல்லை

ஒமிக்ரான் மாறுபாடு இருக்கும் நாடுகளில் இருந்து பயணமாவோர் மாறுபாட்டை எடுத்துச் செல்கிறார்களா என்பதை அடையாளம் காண வழி இல்லை என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் மரபணு பகுப்பாய்வு மூலம் மட்டுமே இந்த வைரஸைக் கண்டறிய முடியும் என்றும் மாதிரிகள் மூலம் வைரஸை கண்டறியும் வரை, நாடு முழுவதும் தொற்று பரவக்கூடும் என்றும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள மக்கள் இந்த மாறுபாட்டைக் கொண்டு செல்கிறார்களா என்பதை அடையாளம் காண முயற்சிப்பதை விட, ஒமிக்ரோன் மாறுபாடு அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டு பயணிகள் நாட்டிற்குள் நுழைவதை குறைப்பது முக்கியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை தற்போதைய நிலையில் நாட்டை முடக்கும் எண்ணம் சுகாதார அமைச்சுக்கோ அரசாங்கத்திற்கோ இல்லை என்றும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

'அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள் கூறும் கதை'

'அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள் கூறும் கதை' நூல் அதன் ஆசிரியர் குணபால திஸ்ஸகுட்டி ஆராச்சியினால் நேற்று (29) முற்பகல் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்த காலப்பகுதியில் கேட்ட அறிந்த இலங்கை அரசியலின் மறைக்கப்பட்ட ஆபத்தான, சுவாரஸ்சமான மற்றும் பல்வேறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு குணபால திஸ்ஸகுட்டி ஆராச்சி இந்நூலை எழுதியுள்ளார்.

1981ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்று உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு, 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து முதல் முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவான குணபால திஸ்ஸகுட்டி ஆராச்சி, 1990ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

குணபால திஸ்ஸகுட்டி ஆராச்சி களனி பல்கலைக்கழகத்தில் வெகுசன ஊடகப் பிரிவில் பட்டம் பெற்றவராவார்.

முன்னாள் அரசியல் கைதி அழைப்பாணை

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை, பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு பயங்கரவாத விசாரணை பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா- தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் என்பவரையே, எதிர்வரும் 01.12.2021 ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அரசியல் கைதிக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக, எதிர்வரும் 01 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவு கெப்பிட்டல் கட்டடம் நாரஹேன்பிட்ட முகவரியில், 3ஆம் மாடிக்கு சமூகமளிக்குமாறு அழைக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு சுயாதீன விசாரணைகள் அவசியம்

முல்லைத்தீவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் ஒருவர் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும்,சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், 'முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மீது கடந்த 27ஆம் திகதி இராணுவத்தினர் மிலேச்சத்தனமான முறையில் திட்டமிட்ட வகையில் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளியவாய்க்கால் கிழக்கில் வசித்து வரும் குறித்த ஊடகவியலாளர் கடந்த 27 ஆம் திகதி செய்தி சேகரிப்பிற்காக முல்லைத்தீவு சென்று அங்கிருந்து வீடு திரும்பிய நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர் பலகையினை ஒளிப்படம் எடுத்த நிலையிலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினர் ஊடகவியலாளரை கேள்வி கேட்டு அடையாளப்படுத்த சொல்லி கோரிய வேளை குறித்த ஊடகவியலாளர் அடையாள அட்டையினை எடுத்து காட்ட முற்பட்ட வேளையில் படையினர் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இராணுவத்தினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டதுடன், பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது வெரும் கண்துடைப்பு என்றார்.

செயல் திட்ட வெளியீட்டு விழா

இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் 2021-2025 கூட்டாண்மைத் திட்டம் மற்றும் 2022 செயல் திட்ட வெளியீட்டு விழா கடந்த 27 ஆம் திகதி குக்குலேகங்கை லயா லெஷரில், உள்ளூராட்சி மற்றும் அரச அமைச்சர் ரொஷான் ரணசிங்க தலைமையில் நடைபெற்றது.

அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எம். பி.வீரசேகர, இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுரதிஸ்ஸ திஸாநாயக்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் இலங்கை உள்ளூராட்சி நிறுவனத்தின் முழு ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மவுன்ஜின் தோட்ட மக்களின்

பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும்

டி.ஷங்கீதன்

கினிகத்தேனை மவுன்ஜின் தோட்ட மக்களின் பிரச்சினை தொடர்பாக தான் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவருடன் கலந்துரையாடி தீர்வு ஒன்றை பெற்றுத் தருவதாகவும் அவருடன் நேரடியாக தோட்ட மக்கள் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தி தருவதாகவும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளர்.

நேற்று திங்கட்கிழமை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மவுன்ஜின் தோட்ட மக்களை நேரில் சந்தித்த பொழுதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்;

தோட்டத்திலுள்ள மரங்களை நிர்வாகம் வெளியாருக்கு வெட்டி விற்பனை செய்வது. சுமார் 5000 ஆயிரம் தேயிலை செடிகளை வெட்டி நாசமாக்கியுள்ளது. தோட்டங்களை முறையாக பராமரிக்காமையினால் அவை காடுகளாக காட்சி மோசமாக பாதித்துள்ளமை உட்பட இன்னும் பல காரணங்களையும் அவர்கள் முன்வைத்துள்ளனர் என்றும்

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்துள்ளார்.

சிலிண்டர்களை பயன்படுத்த

வேண்டுமா, வேண்டாமா?

பா.நிரோஸ்

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்ந்து வெடிக்கின்றன. சிலிண்டர்களை மக்கள் பயன்படுத்த வேண்டுமா அல்லது வேண்டாமா? என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சபையில் கேள்வி எழுப்பினார்.

வரவு -செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அவர், சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் நேற்று(29) சபையில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, சமையல் எரிவாயுக்கள் தொடர்பான பரிசோதனை அறிக்கையை சபைக்கு ஆற்றுப்படுத்துவதாக கூறியிருந்தார். எனினும் அவ்வாறு செய்யவில்லை என்றார்.

தற்போது ஹட்டன் நகரிலும் சமையல் எரிவாயு வெடித்து சிதறியுள்ளது. சமையில் எரிவாயு சிலிண்டர்களை மக்கள் பயன்படுத்த வேண்டுமா? இல்லையா? என்பதை அரசாங்கத்திலிருக்கும் பொறுப்பானவர்கள் கூற வேண்டும். எதற்காகப் பரிசோதனை அறிக்கையை மறைக்கிறீர்கள்? எனவும் கேள்வி எழுப்பினார்.

சிலிண்டர்கள் வெடிப்புக்கள்;

அச்சத்தில் மக்கள்

பா.நிரோஸ்

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் எப்போது வெடிக்கும் என்கிற அச்ச உணர்வு நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தை போக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூட்டமைப்பு எம்.பி சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (29) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், முல்லைத்தீவு பகுதியில் சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வசந்திரன் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலில் ஈடுபட்ட மூன்று இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த கைது கண்துடைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்றார்.

கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் நீதிமன்றத்தின் முன்பாக ஆஜர்ப்படுத்தப்படாது, பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நாட்டின் தென்பகுதியில் உள்ள ஊடகவியலாளர்கள் அல்லது நாட்டின் பிரபல ஊடக நிறுவனங்களிலுள்ள ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டிருந்தால் இப்படியா பொலிஸார் நடந்துகொள்வார்கள்? எனவும் வினவினார்.

எரிபொருள் விலையை அதிகரிப்பு நாட்டு மக்களுக்கும் பெரும் சுமையாக உள்ளது. இதனை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும். நாளுக்கு நாள் அனைத்து பொருள்களின் விலைகள் நள்ளிரவில் அதிகரிக்கப்படுகின்றன. இது மிகப்பெரிய சுமையாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

அதேபோல சமையல் எரிவாயு வெடிப்பு சம்பங்கள் அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயு வெடிக்கும் என்கிற பயம் நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் மீதான மக்களின் நம்பிக்கை இன்மையே இதற்குக் காரணம். இனிமேல் எரிவாயு வெடிக்காது என்கிற மனநிலையை மக்களுக்கு அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நுழைபவர்களுக்கு

பி.சி.ஆர்யை கட்டாயப்படுத்தவும்

பா.நிரோஸ்

கொரோனா வைரஸின் புதிய திரிபான ஒமிக்ரான் வைரஸ் நாட்டுக்குள் பரவும் அபாயம் இருப்பதாக எச்சரித்தார். மேலும், இது தொடர்பில் நாம் அனைவரும் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒமிக்ரான் வைரஸ் நாட்டுக்கு நுழைவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. இது தொடர்பில் நாம் அறிந்திருக்க வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கும் தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கும் இந்த வைரஸ் பரவலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே,நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டிருந்தாலும், பூஸ்டர் செலுத்திக் கொண்டிருந்தாலும் நாட்டுக்குள் நுழையும் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 60 வயதைக் கடந்த அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகளை விரைவு படுத்த வேண்டும். ஒமிக்ரான் வைரஸ் தொடர்பில் அனைவரும் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் கூறினார்.

மன்னார் எரிவாயு படுக்கை

இந்தியாவுக்கே வழங்க வேண்டும்

சீனாவுக்கு வழங்கினால் எதிர்ப்போம் என்கிறார் செல்வம்

பா.நிரோஸ்

மன்னாரில் எரிவாயு எடுக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் இந்தியாவிடமே வழங்க வேண்டும். இதனையும் சீனாவுக்கு வழங்கினால் கடுமையான எதிர்ப்புக்களுக்கு அரசாங்கம் முகங்கொடுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (29) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துணிவிருந்தால் சர்வதேச விசாரணைக்கு வாருங்கள்

அரசாங்கத்துக்கு கஜேந்திரன் சவால்

பா.நிரோஸ்

போர் குற்றங்களில் அரசாங்கம் ஈடுபடவில்லை என்றால் அதனை நிரூபிக்க சர்வதேச விசாரணை ஒன்றுக்கு வரவேண்டும். துணிவிருந்தால் சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், முள்ளிவாய்க்காலில் வைத்து ஊடகவியலாளர் ஒருவரை இராணுவத்தினர் கொடூரமாக தாக்கியுள்ளனர். இதுவொரு மிருகத்தனமான தாக்குதல். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கண்துடைப்புக்காக கைது செய்யப்பட்ட 3 இராணுவ வீரர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

தமிழர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட பாரிய யுத்தக் குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமையே இதுபோன்ற சம்பவங்களுக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு

சித்தார்த்தனே தலைமை

■ எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் என, தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (28) நடைபெற்ற தமிழீழ மக்கள் கழகத்தின் பொதுச்செயலாளர் சதானந்தனின் நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், "இன்றைக்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒற்றுமைப்பட்ட தரப்பாக நாங்கள் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்கிற விடயம் பேசப்பட்டு கொண்டிருக்கின்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த விடயம் இன்னும் கைகூடவில்லை ஆனால், அதற்காக நாங்கள் இதைக் கைவிட்டுவிட முடியாது.

அன்றைக்கு, கட்சிக்குஉள்ளேயோ கட்சிக்கு வெளியிலோ, ஒரு பிரச்சினை ஏற்படுகிறது என்றால் முதலில் சமாதானம் பேசுகிற ஒரு தூதராக இருந்தவர் தர்மலிங்கம் தான். அவருடைய வழித்தோன்றலாக இங்கே இருக்கக்கூடிய சித்தார்த்தனிடம் தமிழ்த் தேசிய இனத்தினுடைய நன்மை கருதி, சிதறிப் போயிருக்கக் கூடிய தமிழர் தரப்புகளை ஒற்றுமைப்படுத்த வேண்டிய தேவை கருதி, அதனுடைய முக்கியத்துவம் கருதி, இன்றைக்கு சகல தமிழ்த் தரப்புகளையும் ஒன்றிணைக்க கூடிய ஆற்றல் இருப்பதாக நான் கருதுகிறேன்.

ஏனென்றால், எந்தவொரு விடயத்தையும் நிதானமாகவும் பொறுப்பாகவும் செயற்படுத்தி, எல்லோரோடும் நட்போடு பழகக் கூடிய தன்மையும் இருக்கக்கூடிய சித்தார்த்தன், ஒற்றுமை முயற்சியை தலைமை தாங்கி கொண்டு செல்ல வேண்டும் என்று, நான் அவரிடம் மிகவும் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதை அவர் நிறைவேற்ற வேண்டும். அதுதான் அவர் தமிழினத்துக்கு செய்யக்கூடிய ஒரு மாபெரும் கடமையாக இருக்கும்" என, மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

சமையல் எரிவாயு:

கிழக்கிலும் வெடிக்கின்றன

■ ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நாட்டில் சமையல் எரிவாயுகளால் ஏற்படும் விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அந்தவகையில், கிழக்கு மாகாணத்திலும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அண்மைய நாள்களில் சமையல் எரிவாயு விபத்துகள் நிகழ்கின்றன.

இதன்படி, கிண்ணியா, ஆலங்கேணி பாடசாலை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (28) பகல் சமைக்கும் போது, சமையல் எரிவாயு வெடித்து தீப்பற்றியுள்ளது.

இதனால் வீட்டிலிருந்தோர் வெளியில் ஓடி வந்து அயலவரின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர். இதனால் அவ் வீட்டின் சமையலறையில் இருந்த அடுப்பு உள்ளிட்ட பொருள்கள் தீப்பற்றியுள்ளதுடன், ஜன்னலும் சேதமாகியுள்ளது. எனினும், எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இதேவேளை, மட்டக்களப்பு, ஏறாவூரில் சமையலறையில் கேஸ் அடுப்பு வெடித்து நொறுங்கியுள்ளது. எனினும், தெய்வாதீனமாக எவருக்கும் காயங்களோ சேதங்களோ ஏற்படவில்லை என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஏறாவூர், மிச்நகர் பகுதியில் இந்தச் சம்பவம், நேற்று (29) நண்பகல் 12.15க்கு இடம்பெற்றுள்ளது.

வீட்டில் குடும்ப பெண் சமையல் வேலைகளில் ஈடுபட்டு முடிந்ததும் கேஸ் சிலிண்டரை நிறுத்திவிட்டு, சமையலறையில் இருந்து வெளியே வந்தபோதே கேஸ் அடுப்பு வெடித்துள்ளது.

கேஸ் அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளபோதிலும் தீ பற்றிக் கொள்ளவில்லை. அதனால் பொருள் சேதங்களோ காயங்களோ ஏற்படவில்லை என்றும் வீட்டார் தெரிவித்தனர்.

தேவாலயம் மீது தாக்குதல்:

வேண்டுமென்றே செய்யவில்லை

■ எம். றொசாந்த், என். ராஜ்

யாழ்ப்பாணம் கோட்டையில் இடம்பெற்ற தேவாலயம் மீதான தாக்குதல் வேண்டுமென்று செய்யப்பட்ட விடயமல்ல எனத் தெரிவித்த நாவாந்துறை பங்குத்தந்தை அருட்தந்தை ஜேசுரட்ணம் அடிகளார், இந்தத் தேவாலயம் மீதான தாக்குதல் ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்டது எனவும் கூறினார்.

நேற்று (29) அதிகாலை, கோட்டைக்கு அருகிலுள்ள புனித அந்தோனியார் தேவாலய சொரூபங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், "குறித்த செயலை செய்தவர் ஏற்கெனவே எனக்கு அறிமுகமானவர். அவர் ஒரு மனநோயாளி. நீண்ட காலமாக இந்தத் தேவாலயத்திலேயே தங்கி வருகிறார். நாங்கள் பலமுறை அவரை வெளியேறுமாறு கேட்டிருந்தோம். ஆனால், அவர் போகவில்லை.

இது வேண்டுமென்று செய்யப்பட்ட ஒரு விடயம் அல்ல; ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்ட விடயமாகும். அவரை பொலிஸார் கைது செய்துள்ளார்கள். பின்னர் எனக்கு அறிவித்திருந்தார்கள். நான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்துள்ளேன். அதனுடைய தொடர்ச்சியான நடவடிக்கையை பொலிஸார் எடுப்பார்கள். எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடைய தேவையில்லை" எனவும் நாவாந்துறை பங்குத்தந்தை அருட்தந்தை ஜேசுரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

அரசியல்தலைமைகளின்

ஒற்றுமை முயற்சிக்கு ஒத்துழைக்கவும்

■ என்.ராஜ்

அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு, ஏனைய கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என, பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு, பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் என, தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளமை தொடர்பில், நேற்று முன்தினம் (28) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, த.சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், "நாம் தொடர்ச்சியாக அரசியல் தலைமைகளின் ஒற்றுமைக்கு முயற்சித்துக் கொண்டு இருக்கின்றோம். தனிப்பட்ட ரீதியாகவும் மற்றவர்களுடன் பேசி பல முயற்சிகளை எடுத்து வருகின்றோம்.

தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு ஒன்றுபடுவோமாக இருந்தால், அடுத்த கட்டமாக ஒரு பலமான தேசிய அரசியல் அமைப்பாக வந்து, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

ஆகவே, மாவை, சுரேஷ், செல்வம் போன்ற அனைவரும் இணைந்து, இந்த முயற்சியை எடுக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை" எனவும், சித்தார்த்தன் கூறினார்.

கௌரவிப்பு...

யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்குவை கௌரவிக்கும் நிகழ்வொன்று, யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில், நேற்று முன்தினம் (28) நடைபெற்றது. பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் ஆதரவில் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (படப்பிடிப்பு: எம். றொசாந்த்)

வான் – மோட்டர் சைக்கிள்

விபத்து; ஒருவர் பலி

■ கனகராஜா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள வாழைக்காடு சந்தியில் வானும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி, நேற்று (29) காலை 8.30க்கு விபத்துக்குள்ளாகின.

கொக்கட்டிச்சோலையில் இருந்து வவுணதீவு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் வவுணதீவு, தாண்டியடியில் இருந்து கொக்கட்டிச்சோலை நோக்கிச் சென்ற வானுமே, வாழைக்காடு சந்தியில் வைத்து நேருக்கு நேர் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

> **மோட்டார் சைக்கிளை செலுத்திய கொக்கட்டிச்சோலையை சேர்ந்த 58 வயதுடைய மைலப்போடி சுந்தரலிங்கம் என்பவர் உயிரிழந்துள்ளார்**

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய மைலப்போடி சுந்தரலிங்கம் என்பவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து, வான் சாரதியை கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார். உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாணவிகள் கௌரவிப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, நேற்று (29) நடைபெற்றது.

அதிபர் எம்.ரீ.எம்.பரீட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவிகளுக்கு இலங்கை பரீட்சை திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், கற்பித்த ஆசிரியர்களுக்கு பிரதேச தனவந்தர் ஒருவரின் பங்களிப்பில் பணப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

> **அதிபர் எம்.ரீ.எம். பரீட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவிகளுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கற்பித்த ஆசிரியர்களுக்கு பிரதேச தனவந்தர் ஒருவரின் பங்களிப்பில் பணப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது**

இந்நிகழ்வின் அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அஹ்ஸாப், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம். யூ.எம்.இஸ்மாயில், ஏ.எம். ஜாபிர் கரீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அதிபரை

இடம்மாற்றுமாறு ஆர்ப்பாட்டம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள கர்பலா அல்மனார் வித்தியாலய அதிபரை உடனடியாக பாடசாலையை விட்டு இடம்மாற்றுமாறு கோரி, மாணவர்களும் பெற்றோரும் நேற்று (29) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையின் அதிபர், மாணவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இங்கு வருகை தந்த காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எம். கலாவுதீன், இந்த விடயம் தொடர்பில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எஸ்.உமர் மௌலானாவின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளரின் நடவடிக்கையின் கீழ், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வியலுவகத்தின் நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரமீஸ் தலைமையில் பாடசாலைக்கு வருகை தந்த அதிகாரிகள் குழு, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

> **பாடசாலையின் அதிபர், மாணவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்**

இதையடுத்து ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததுடன், மூன்று வாரங்களுக்குள் இதற்கான தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோரிடமும் தனித்தனியாக அதிபருக்கு எதிராக முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகளையும் எழுத்து மூலம் பெற்றுக்கொண்டனர்.

திருகோணமலை நகர சபை பட்ஜெட்

ஏகமனதாக நிறைவேற்றம்

■ வடமலை ராஜ்குமார்

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம், சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் தலைவர் நா. இராஜநாயகம் தலைமையில் நேற்று (29) கூடியது.

சபையின் மொத்த உறுப்பினர்கள் 24 பேரில் 23 உறுப்பினர்கள் இந்த அமர்வில் கலந்து கொண்டிருந்தனர். ஒருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை

இதனடிப்படையில், இவ்வரவு செலவுத் திட்டம் 23 பேரின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றபட்டது.

மிரட்டி மதம் மாற்ற முயன்றோர் கைது

■ சண்முகம் தவசீலன்

"மதம் மாறாவிட்டால் ஆண்டவரின் சாபம் கிடைக்கும்" என மிரட்டி, மதம் மாற்ற முயன்ற குற்றச்சாட்டில் 3 பேர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் ஒன்று, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பனிக்கன்குளம், கிழவன்குளம் கிராமத்தில், நேற்று முன்தினம் (28) இடம்பெற்றுள்ளது.

மதம் மாற்றச் சென்ற கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த ஒரு குழுவினர், தன்னைப் பேசி, அச்சுறுத்தல் விடுத்ததாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, மாங்குளம் பொலிஸாரால் வாகனத்துடன் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிழவன்குளம் பகுதிக்கு, ஹயஸ் ரக வானில் சனிக்கிழமை (27) சென்ற ஒரு குழுவினர், அங்குள்ள வீடு ஒன்றின் முன்னால் நின்று, அந்த வீட்டு குடும்பஸ்தரை அழைத்து, தமது மதத்துக்கு மாறுமாறு கேட்டுள்ளனர். அதற்கு மறுத்தபோது, தரக்குறைவாக பேசியதுடன், அச்சுறுத்தல் விடுத்தனர்.

தேவாலயம் மீது தாக்குதல்

ஒருவர் கைது

■ எஸ். நிதர்ஷன், எம்.றொசாந்த், என். ராஜ்

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையில் உள்ள சுத்தோலிக்க தேவாலயம் மீது, நேற்று (29) அதிகாலை 3:30 மணியளவில், தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, அவ்விடத்துக்கு விரைந்த யாழ்ப்பாணப் பொலிஸார், விசாரணை நடத்தியதோடு குறித்த தாக்குதலை நடத்திய குற்றச்சாட்டில், கொட்டடி பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர், மது போதையில் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை, யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அலுகொல்ல மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு

தீர்வு காண உறுதியளிப்பு

■ எம். செல்வராஜா

வெலிமடை பகுதியின் போகாகும்பர, அலுகொல்லை பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 24 குடும்பங்களுக்கு நீர் விநியோகம் முறையாககட கிடைக்காததால், அம்மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் எனவே இவர்களின் பிரச்சினையை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை முகாமையாளருக்கு அனுப்பியுள்ள

கடிதமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

தொடர்ந்து அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவது:

'அலுகொல்லை முஸ்லிம் பள்ளிவாசல் வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக, நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அவ்விடத்திலிருந்து 260 மீட்டர் தொலைவிலேயே, மேற்குறிப்பிட்ட 24 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, நீரின்றி பாதிப்புற்றிருக்கும் அக் குடும்பத்தினருக்கு, வடிகாலமைப்புச் சபை ஊடாக நீரைப் பெற்றக் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்கமைய, போகாகும்பர நீர் விநியோகத்திட்டத்தின் கீழ், குறித்த 24 குடும்பங்களுக்கும் வெகு விரைவில் நீர் வழங்கும் நடவடிக்கையை முன்னெடுப்பதாக, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர், அரவிந்தகுமார் எம். பியின் கடிதத்துக்கு பதில் அனுப்பியுள்ளார்.

பசறை, பாரதி த.ம. வித்தியாலயத்தின் ஸ்தாபகர்

இயற்கை எய்தினார்

■ ஆ.புஷ்பரசன்



பசறை, பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபக அதிபர், பாரதி இராமசாமி நேற்று (29) காலை பிபிலை வீதி, 13 ஆவது மைல்கல்லில் உள்ள தனது இல்லத்தில் 89 ஆவது வயதில் இயற்கையெய்தினார்.

1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பதுளையில் இருந்த தனவந்தரும், கொடையாளருமான இரத்தினசாமி என்பவரிடம் காணியைப் பெற்று, அச்சக உரிமையாளர் சற்குருநாதன், ஊடகவியலாளர் பெரி. கந்தசாமி, கவிஞர் தமிழோவியன் ஆகியோரின் துணையுடன் பாரதி கல்லூரியை ஆரம்பித்தார்.

ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியைத் தொடர முடியாதிருந்த இங்குருகமுவ, தெளிவத்தை, வேவெஸ்ஸ உட்பட பல தோட்டங்களின் மாணவர்களை லயன் குடியிருப்புகளுக்கு தேடிச்சென்று வலுக்கட்டாயமாக பாடசாலையில் இணைத்தார்.

அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (30) பதுளையில் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குடும்ப உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

லிந்துலையில் தோட்ட

தலைவர்களைச் சந்தித்த இ.தொ.கா

■ பா.பாலேந்திரன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் லிந்துலை பணிமனையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்டத் தலைவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், தற்போது காணப்படும் தொழிற்சங்க பிரச்சினைகள், பிரதேச அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா , உப தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பழனி சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

டொரிங்டன் தோட்டத் தொழிலாளர்கள்

பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

■ எஸ்.கணேசன், துவாரகேஷன்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை அதிகரிப்புக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் தெரிவித்து, அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (29) ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம், டொரிங்டன் தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக இடம்பெற்றதோடு, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தேயிலை மலைகளில் வளர்ந்த புற்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் பதாதைகளை ஏந்தியும், தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

தோட்ட நிர்வாகம் தற்போது வேலை நாள்களை குறைத்துள்ளதாகவும், தேயிலை செடிகளை பராமரிப்பதை கைகழுவி விட்டதால், தேயிலை மலைகள் காடாகி காணப்படுவதுடன், தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட இத்தொழிலாளர்கள் தற்போதைய பொருட்களின் விலை அதிகரிப்பால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில், நிர்வாகம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்குவதாக இருந்தால் கட்டாயமாக, 20 கிலோ கிராம் கொழுந்து பறிக்க வேண்டும் என வலியுறுத்தி வருவதால் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்படும் கொழுந்தினை பறிக்க முடியாத சூழ்நிலைக்கு தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

நுவரெலியா ரோட்டரி கழகம், 1.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான சிறுநீரக கற்களை துண்டுகளாக்கும் IPL இயந்திரத்தை, நுவரெலியா தேசிய வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கியது. ரோட்டரி இலங்கை 3220 மாவட்ட ஆளுநர், அருணி மலலசேகர நுவரெலியா ரோட்டரி சங்க உறுப்பினர்களுடன் இணைந்து, வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் மகேந்திர சௌவிரத்னவிடம் குறித்த இயந்திரத்தை கையளித்தார். டி. சந்ரு

ஹட்டனிலும்

சமையல் எரிவாயு குழாய் வெடித்தது

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியில் புருட்ஹில் பகுதியில் நடத்திச் செல்லப்படும் ஹோட்டலொன்றில் நேற்று (29) காலை சமையல் எரிவாயு வெடித்ததாக அதன் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை சமையல் எரிவாயு அடுப்பை பற்றவைத்து ஒரு மணித்தியாலத்தின் பின்னர், சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பை இணைக்கும் குழாய் வெடித்துச் சிதறியதாகத் தெரிவித்தனர்.

எனினும் இதன் போது எவருக்கும்

எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதுடன், ஹோட்டலுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டல் மாடியிலிருந்து

தவறி விழுந்தவர் மரணம்

■ டி.சந்ரு

நுவரெலியாவில் பிரசித்தி பெற்ற ஹோட்டல் ஒன்றின் ஐந்தாவது மாடியில் இருந்து தவறி விழுந்த ஒருவர், அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று (29) அதிகாலை 1.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குறித்த ஹோட்டலில் மேற்பார்வையாளராக பணியாற்றி வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடைய, பிரியந்த ஹெட்டியாராச்சி என தெரிவித்துள்ள பொலிஸார், இவர் தவறி விழுந்த போது, மது போதையில் இருந்ததாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கல்கிரிய தோட்ட மக்களுக்கு தனி வீடுகள்

■ எஸ்.கணேசன்

கண்டி, பன்வில, கலகிரிய தோட்ட மக்களுக்கு புதிய வாழ்வு எனும் திட்டத்தின் கீழ், 20 தனி வீடுளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிராஜா சக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தலைமையில் நடைபெற்றது.

பன்வில, கலகிரிய தோட்ட மக்களுக்கு, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய, தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2 கோடி 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இவ் வீடமைப்பு திட்டம் செயற்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில்

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க பணிப்பாளர், தோட்ட அதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் அதிகாரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெல்லவாயவில்

இரண்டாவது சதொச நிலையம் திறப்பு

■ சுமணசிறி குணதிலக

வெல்லவாய நகரில் மற்றுமொரு சதொச விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயாசான் நவனந்தவால், வெல்லவாய-எல்ல வீதியில் புதிய சதொச விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வெல்லவாய நகரில், சில மாதங்களுக்கு முன்னர், வர்த்தகத்தறை அமைச்சரால் முதலாவது சதொச விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

'பொடி மெனிகே' இரண்டும்

வட்டகொடையில் சந்தித்தன

■ ரஞ்சித் ராஜக்ஸ

கொரோனா தொற்றால் கடந்த 8 மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த மலையகத்துக்கான ரயில் சேவைகள் நேற்று (29) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய, கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரை பயணிக்கும் பொடி மெனிகேயும் பதுளையிலிருந்து கொழும்பு-கோட்டை வரை பயணிக்கும் பொடி மெனிகே ரயிலும் வட்டகொடை ரயில் நிலையத்தில் சந்தித்துக்கொண்டன.

இதேவேளை பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரை பயணித்த பொடி மெனிகேயில் அதிகளவான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை காணக்கூடியவாறு இருந்தது.

விதை உருளைக்கிழங்கு இறக்குமதியை நிறுத்திவிட்டு

இலங்கையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவும்

இராதா எம்.பி தெரிவிப்பு

■ டிஷாங்கிதன்

இறக்குமதி செய்யப்படுகின்ற விதை உருளைக்கிழங்கை நிறுத்திவிட்டு, இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுங்கள் எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், அதற்கான அனைத்து வசதிகளும் இலங்கையில் இருக்கின்றன என்றார்.

இலங்கையில் விதை உருளைக்கிழங்கை உற்பத்தி செய்வதற்கு அனைத்து வசதிகள் இருந்தும் ஏன் அதனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதில்லை என எனக்கு புரியாதிருக்கின்றது எனக் கேள்வி எழுப்பினார்.

இலங்கையின் காலநிலை, அதற்கான வசதிகள் அதற்கான முழுமையான அறிவை கொண்ட விவசாயம் சார்ந்தவர்கள், இப்படி அனைத்து வசதிகளையும் வைத்துக் கொண்டு, ஏன் இறக்குமதியை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையை பொறுத்த வரை நுவரெலியா மாவட்டத்தில் பீட்று பாம், சீத்தாஎலிய பாம், கந்தப்பளை பாம், மீப்பிலிமான பாம், போபத்தலாவ பாம், ஊவா மாகாணத்தில் போகாகும்புற பாம் ஆகிய 6 இடங்கள் இருக்கின்றன.

இங்கு அனைத்து வசதிகளும் தேவையான நிலப்பரப்பும் இருக்கின்றன. இதிலே எங்களுடைய நாட்டிற்கு தேவையான விதை கிழங்கை உற்பத்தி செய்யக்கூடிய காலநிலை காணப்படுகின்றது. இப்படி அனைத்து வசதிகளையும் வைத்துக் கொண்டு, ஏன் கடந்த 25 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்கின்ற அரசாங்கங்கள் இதனை இலங்கையில் உற்பத்தி செய்ய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை.

நான் நுவரெலியா பகுதியில் இருக்கின்ற விவசாயி என்ற வகையில், இந்தப் பாராளுமன்றத்தில் பலமுறை இது தொடர்பாக பேசி இருக்கின்றேன். விவசாய அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களின் கவனத்திற்கு பலமுறை கொண்டு வந்திருக்கின்றேன். ஆனால் இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் யாரும் முன்னெடுக்கவில்லை.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எமக்கு டொலர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிலைமை இல்லாமல் இருக்கின்றது. குறிப்பாக விவசாயத்திற்கான பொருட்களை இறக்குமதி செய்வதில் அரசாங்கம் பல தடைகளை ஏற்படுத்தி இருக்கின்றது என்றார்.

எல்லைகளை மூடுகிறது 'ஒமிக்ரான்' கொரோனா வைரஸ்

எந்தவொரு விடயத்திலும் ஆக்கூடுதலான கவனத்தை செலுத்தவிடாமல், தன்னை அழித்தொழிக்கும் செயற்பாடுகளுக்கே ஆக்கூடுதலான முக்கியத்துவத்தை வழங்கும் வகையில், தாண்டவமாடிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ், 'ஒமிக்ரான்' எனும் பிறழ்வாக, கொஞ்சம் கொஞ்சமாக, எல்லைகளை மூடிக்கொண்டிருக்கிறது.

தங்களுடைய நாட்டுக்குள்ளும் 'ஒமிக்ரான்' நுழைந்துவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை ஏற்பாடாகப் பல நாடுகள், தங்களுடைய எல்லைகளை அதிரடியாக மூடிவிட்டன. 'ஒமிக்ரான்' வைரஸ் இனங்காணப்பட்ட நாடுகளில் இருந்து எவரும் வந்துவிடாத வகையில், இலங்கை கதவை அடைத்துவிட்டது.

உலக நாடுகள் எல்லைகளை மூடிக்கொண்டிருக்கும் நிலையில், 'ஒமிக்ரான்' வைரஸ் இனங்காணப்பட்ட நாடுகளிலிருந்து வருகைதருவோருக்கு மட்டுமே கதவுகள் அடைக்கப்பட்டமை போதுமானதாக கருதிக்கொள்ள முடியாது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக, எந்தவொரு வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தவிடாது செய்த கொரோனா வைரஸ், புதுவகையில் விஷ்வரூபம் எடுத்துள்ளது எனலாம். கொரோனாவுக்குப் பின்னரான உருமாறிய வைரஸுகள் நூற்றுக்கணக்கில் இருந்தன. எனினும், பீட்டா, காமா, டெல்டா, ஆல்பா ஆகிய நான்கு வைரஸுகளே தொடர்ச்சியாக அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றன.

வைரஸுக்கு அஞ்சி, வீடுகளுக்குள்ளே முடங்கியிருந்த காலம் மலையேற, சுகாதார வழிகாட்டல்களை இறுக்கிய நாடுகள், எல்லைகளைத் திறந்து வழமையான செயற்பாடுகளில் இறங்கிவிட்டன. நமது நாடும் இறுதியாக பாடசாலைகளை ஆரம்பித்துவிட்டது. இந்நிலையிலேயே புதிய நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

அலைக்குமேல் அலைகள் வந்துகொண்டிருந்தமையால், பொருளாதார ரீதியில் தலையைத் தூக்கமுடியாத நிலைமையே ஏற்பட்டிருந்தது. எனினும், தடுப்பூசியை வேகப்படுத்திய அரசாங்கம், சுகாதார வழிகாட்டல்களைக் கடுமையாக்கியதன் ஊடாக ஓரளவுக்குத் தாக்குப்பிடிக்க முடிந்தது.

முதலிரு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டவர்களில் பலருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டது. மூன்றாவதாக பூஸ்டரும் ஏற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணித்தவர்களில் பலரும், தொற்றாநோய்கள் அல்லது நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தவர்கள் என அறியப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தென் ஆபிரிக்க நாடொன்றில் பி.1.1.529 எனும் உருமாறிய கொரோனா கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு 'ஒமிக்ரான்' என பெயர்சூட்டப்பட்டுள்ளது. கொரோனா அலைகளுக்குள் இருந்து, உலகம் முற்றாக மீண்டெழ முடியாத நிலையில் திணறிக்கொண்டிருக்கையில், 'ஒமிக்ரான்' ஏனைய பல நாடுகளிலும் கால்களைப் பதித்துவிட்டது.

இதனால் கவலை கொண்டுள்ள உலக சுகாதார ஸ்தாபனம், ஏனைய வைரஸுகளை விடவும் 'ஒமிக்ரான்' வைரஸ் மிகவேகமாக பரவக்கூடியதென எச்சரித்துள்ளது.

எனினும், தென் ஆபிரிக்காவிலிருந்து வரும் விமானங்களை மட்டுமே தடை செய்வதன் ஊடாக, 'ஒமிக்ரான்' வைரஸ் பரவாமல் இருப்பதைத் தடுக்கமுடியாது. சுகாதார வழிகாட்டல்களை இன்னுமின்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும். பொதுப் போக்குவரத்துச் சேவைகள், பொது இடங்களில் எவ்வளவுக்கு எவ்வளவு சமூக இடைவெளியைப் பேணமுடியுமோ, அந்தளவுக்குப் பேணவேண்டும். இல்லையேல், விரும்பியோ விரும்பாமலோ, முழுமையாக முடக்கத்துக்குள் நாடு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இது, தலையைத் தூக்கவிடாது செய்துவிடும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

பண்டைய காலத்தில், உலக நாடுகளிடையே கொடிய யுத்தங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். செழிப்பான நாடுகள், வேண்டுமென்றே சில நாடுகளுக்கிடையில் யுத்தங்களை உருவாக்கிவிடும். இதனால், நன்கு ஆட்சிசெய்த நாடுகள் தோற்பதும் உண்டு. பின்னர், அந்த நாட்டிலுள்ள வளங்கள் சூறையாடப்படும்.

தோல்வியடைந்த நாட்டின் செல்வங்கள், வென்ற நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும். தனது நாட்டில் சிறப்பான ஆட்சியும் கைப்பற்றிய நாட்டில் கொடுங்கோல் ஆட்சியும் நடைபெறும். தோல்வி கண்ட அரசன், பிறநாட்டின் உதவியுடன் மீண்டும் தனது நாட்டைக் கைப்பற்றுவான்.

இதே முறையில்தான், நாடுகளில் புரட்சிகளும் ஏற்பட்டன; சர்வாதிகார ஆட்சிகளும் அமைக்கப்பட்டன. மக்களுக்காக உழைக்கின்றோம் என்பார்கள். ஆனால், மக்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இடையில் வாழும் மக்கள் நலிந்து, நசுங்கிப் போய்விடுவார்கள். நீதி, நியாயம், பொய் எல்லாமே மாறி, மாறி வந்துபோகும்.

யுத்தக் கிலி, உலகிலிருந்து ஒருபோதும் முழுமையாக அகன்றுவிடுவதில்லை. நிம்மதி இல்லாமல் மக்கள் அகதிகளாகச் சிதறி ஓடுவார்கள். நிம்மதியை மனிதன்தான் சிதைக்கிறான். எப்போது முடியும் இந்த நிலை?

–பருத்தியூர் பாலா வமிரவநாதன்

சின்ன வெங்காயம் முதல் சிலிண்டர் வெடிப்பு வரை

மொஹமட் பாதுஷா

கடந்த வாரம் ஒரே நாளில், இரண்டு சம்பவங்கள் பதிவாகின. ஒன்று, கொழும்பு புறநகர்ப் பகுதியான களனி ஆற்றுக்கு மேலாக, 'தங்க நுழைவாயில் மேம்பாலம்' கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. மற்றையது, கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் பாலம் இல்லாத காரணத்தால், படகுப் பாதையில் பயணித்த அப்பாவி மாணவர்கள் உட்பட ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்றும், எல்லா மக்களையும் பிராந்தியங்களையும் ஒரே கண்ணோட்டத்திலேயே நோக்குவதாக, ஆட்சியாளர்கள் காலகாலமாகக் கூறி வருகின்ற போதிலும், இலங்கையின் அபிவிருத்தியிலும் சரி, வருமானத்திலும் சரி, சட்டம் மற்றும் நீதி விடயங்களிலும் சரி.... நிறையவே ஏற்றத் தாழ்வுகள், பிராந்தியங்களுக்கு இடையில் இருக்கின்றமை நிதர்சனமானது.

மேற்குறித்த சம்பவங்கள், இதற்கு ஒரேயோர் உதாரணம் மட்டும்தான்! இதுபோல, நிறையவே பாகுபாடுகள் இருப்பதையும் இதுவிடயத்தில் பொறுப்புவாய்ந்தவர்கள் பொறுப்பும் பொறுப்புக்கூறலும் இன்றி நடந்து கொள்வதையும், வரலாறு நெடுகிலும் காணலாம். ஆனால், கடந்த சில வருடங்களாக, இதைச் சற்று அதிகமாகவே மக்களை உணரத் தலைப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் அபிவிருத்தியுடனான ஆளுகையின் முன்னோடிகளாக ராஜபக்ஷர்களைக் கூற முடியும். கிராமப் புறங்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை கொண்டு சென்றார்கள். ஆயினும், நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகளில் அரைவாசி அளவுக்குக்கூட, அபிவிருத்திகள் இன்னும் சென்றடையாத கிராமங்களும் உள்ளன. குறிஞ்சாக்கேணி சம்பவம் இதற்கு நல்ல சான்றாகும்.

மறுபுறத்தில், கொழும்பு-07இல் அல்லது கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை போன்ற இடங்களில் இருக்கின்ற மேற்றட்டு, மேல்நடுத்தர வர்க்க மக்களின் வருமானமும் வாழ்க்கைத் தரமும், அதே கொழும்பின் பஞ்சிகாவத்தை, மாளிகாவத்தை உட்பட சில சேரிப்புற மக்களுக்கு கிடைக்கவில்லை.

எல்லா ஊர்களிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது என்றாலும், புலப்படும் விதத்திலான உயர் ஏற்றத்தாழ்வு, நாட்டின் தலைநகரிலேயே காணப்படுகின்றது. ஆனால், கொழும்பு என்ற பெருமிதத்துக்குள் அவர்களது வறுமை மறைக்கப்பட்டு விடுகின்றது. இப்படியான நிலைமை, வேறு பல நகரங்களில் உள்ளது.

கொரோனா நெருக்கடியும் இலங்கையின் பொருளாதார பின்னடைவும் பொருட்களின் விலை அதிகரிப்பும் இவ்வாறான ஏழை மக்களை மட்டுமன்றி, நடுத்தர வர்க்கத்தினரையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

இலங்கையில், தமிழர்கள் தங்களது உரிமைகளுக்காகவும் நீதிக்காகவும் போராடி வருகின்றார்கள். இப்போது கத்தோலிக்க மக்களும் நீதி வேண்டி நிற்கின்றனர். அதேவேளை, தம்மை நியாயபூர்வமாக பெருந்தேசியம் கையாள வேண்டும் என்று முஸ்லிம்கள் அவாவி நிற்கின்றனர். சில விவகாரங்களில் சிங்கள மக்கள் கூட, நீதி வேண்டி வீதிக்கு வருவதைக் காணலாம்.

இந்தப் பின்னணியில், இலங்கை மக்களிடையே வாழ்க்கைச் சுமையும் வாழ்வியல் நெருக்கடிகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. பயங்கரவாதம் போன்ற பொது விடயங்களுக்காகப் போராடிய மக்கள், இன்று வாழ்வாதாரத்துக்காகவும் உணவுப் பொருட்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஏனெனில், அரச சேவையில் இருப்பதாகச் சொல்லப்படுகின்ற பொருளாதார வல்லுநர்கள், மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கான திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதாகத் தெரியவில்லை. அதுபோல, மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து, ஆட்சியாளர்கள் காத்திரமாகச் செயலாற்றுகின்றார்கள் என்று மக்கள் ஆறுதலடையும் நிலைமைகளும், இன்னும் கற்பனையாகவே இருக்கின்றன.

பால்மா, சமையல் எரிவாயு, சீனி, கோதுமை மா என சின்னவெங்காயம் முதல் சீமெந்து வரை, ஏகப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, நாம் அடிக்கடி கொள்வனவு செய்கின்ற சவர்க்காரம், சலவைத் தூள், தேயிலைத் தூள், நூடில்ஸ் போன்ற ஏனைய பல பொருட்களின் விலைகள் சத்தமில்லாமல் அதிகரிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இதனால், இவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களின் விலைகள் மற்றும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. சிற்றுண்டிகள் முதற்கொண்டு கேஸ் சிலிண்டர் விலை வரை, பல உற்பத்திகளுக்கு தான்தோன்றித்தனமாக விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பு ஒருபுறமிருக்க, பொருட்களுக்கான தட்டுப்பாடு இன்னும் ஒருபுறம் மக்களை நெருக்குகின்றது. இது, கறுப்புச் சந்தை விலையேற்றங்களுக்கு காரணமாகி இருக்கின்றது. அத்துடன், பால்மா போன்ற சில பொருட்களின் சுவை மற்றும் தரத்தில் வேறுபாடு உணரப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

இதுவெல்லாம் ஒருபுறமிருக்க, இப்போது கேஸ் சிலிண்டர்கள் வெடிக்கத் தொடங்கியுள்ளன. கடந்த சில நாள்களாக பத்துக்கும் குறைவில்லாத சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால், உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

ரூபாய் 1,600 இற்கு விற்கப்பட்ட 12.5 கிலோ கிராமுக்குச் சமமான ஒரு சிலிண்டர் கேஸின் விலை 2,750 ரூபாயாக அதிகரிக்கப்பட்டாயிற்று. 7,000 ரூபாவுக்கு குறைந்த விலையில் விற்கப்பட்ட ஒரு வெற்று சிலிண்டரின் விலை 15,000 ரூபாவை தாண்டி விட்டது.

இவ்வளவு பிரயத்தனப்பட்டு, அதிக விலை கொடுத்து வீட்டுக்கு வாங்கி வருகின்ற குறிப்பிட்ட வகையான கேஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுகின்றன. அதாவது, ஒரு வெடிகுண்டை விலை கொடுத்து வாங்கி வருவதான பயமும், யுத்தகளத்தில் நிற்பது போன்ற அச்சமும் வீட்டுரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், நாம் மேற்குறிப்பிட்ட சமூக ஏற்றத் தாழ்வு இன்னும் அதிகரித்துள்ளது. அதுமட்டுமன்றி, வெளியில் காட்டிக் கொள்ளாத 'கௌரவ ஏழை'களின் தொகையும் உயரத் தொடங்கியுள்ளது.

இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படுகின்ற காலங்களில், மக்கள் மீது அச்சுமையை அப்படியே சுமத்தி விடாமல், விலைப் பொறிமுறையை நெறிப்படுத்துவதும் மானியங்களை வழங்குவதும் வழக்கமாகும். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உள்ளடங்கலாக அநேக அரசாங்கங்கள் இவ்விதமே செயற்பட்டன.

ஆனால், இப்போது விலையுயர்வு உள்ளடங்கலாக மேற்குறிப்பிட்ட எந்த விடயத்திலும், அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்ததாக, மக்களால் நிம்மதிப் பெருமூச்சு விட முடியவில்லை. மூளைசாலி அரசியல்வாதிகளாலும் மத்திய வங்கியின் ஆளுநராலும் வெற்றிகரமாக இதனைச் சமாளிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

எரிவாயு சிலிண்டர்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கலவையில் ஏற்பட்ட மாற்றமே இந்த வெடிப்புகளுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. அப்படியென்றால், மக்கள் கொள்வனவு செய்த மற்றும் சந்தையில் உள்ள சிலிண்டர்கள் மீளப் பெறப்பட்டிருக்க வேண்டும். அதுதான் உலக வழக்கம்; ஆனால், அதற்கான உத்தரவை அரசு பிறப்பித்ததாகத் தெரியவில்லை.

அதுபோல, இது ஒரு நெருக்கடியான காலகட்டம் என்பதை மக்கள் அறியாதவர்களல்லர். ஆயினும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், பல பொருட்களின் விலைகளை இந்த வீச்சில் அதிகரிக்க விடாதவாறு, அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

அது நடக்கவில்லை என்பதுடன், இனிமேலாவது நடக்குமா என்ற ஐயப்பாடும் மக்களுக்கு ஏற்படும் விதத்திலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. விலை குறைக்கப்படவில்லை என்பதை விட, அரசாங்கத்தின் போக்கும், விலை அதிகரிப்புக்கு அளிக்கப்படும் விளக்கங்களுமே மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆளுகையிலும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களிலும், ஒவ்வொரு பிராந்தியத்தையும் வெவ்வேறு கண்கொண்டு நோக்குவது, பிராந்தியங்களிடையே மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தோற்றுவிக்கும்.

அதுபோலவே, பல்தேசியக் கம்பனிகள் முதல் சாதாரண வியாபாரிகள் வரை தங்களுக்கு விரும்பிய விதத்தில் விலைகளை அதிகரிப்பதும் அது விடயத்தில் அரசாங்கம் வாழாவிருப்பதும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிக மோசமாகப் பாதிப்பது மட்டுமன்றி, ஏழை - பணக்கார ஏற்றத்தாழ்வின் இடைவெளி இன்னும் அதிகரிப்பதற்கே இட்டுச் செல்லும்.

வெறுமனே, விலை அதிகரிப்புகளுக்கு அனுமதி அளித்துக் கொண்டு, 'மக்கள் இந்த சுமையை தாங்குவதைத் தவிர வேறு வழியில்லை' என்று அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதாயின், அதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் இத்தனை நிபுணர்களும் எதற்காக? என்ற கேள்வி மக்களிடம் உள்ளது.

கடிதங்கள்

எலுவங்குளம்

தாமரைக் குளத்தை புனரமைக்கவும்

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக, புத்தளம், வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பழைய எலுவான்குளம் கிராமத்தில் உள்ள தாமரைக் குளத்தில் பல இடங்களில், கசிவு ஏற்பட்டுள்ளதால் உடைப்பெடுக்கும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

இக்குளத்தின் கசிவை, அப்பகுதி விவசாயிகள் மண் மூடைகளையிட்டு சிரமதானம் மூலம் சீர்செய்த போதிலும் அது, உடைப்பெடுப்பதற்கான அறிகுறிகளுடன் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தக் குளம், சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டதுடன், இது உடைப்பெடுக்கும் பட்சத்தில், குளத்தையண்டி வாழும் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படும். அத்துடன், 750 ஏக்கருக்கும் அதிகமான வேளாண்மைச் செய்கையும் பாதிக்கப்படும்.

பொருளாதார ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இப்பகுதி விவசாயிகள், கடன்களைப் பெற்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இக்குளம் உடைப்பெடுத்து, வேளாண்மை பாதிக்கப்பட்டால் அதனை எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாது என்றும் தெரிவிக்கின்றார்கள். எனவே, இக்குளத்தில் ஏற்பட்டுள்ள நீர்க் கசிவை சீர் செய்வதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

–ரஸீன் ரஸ்மின்

நடிகை தனீஷாவுக்கு கொரோனா

ஹிந்தி பிக்பாஸில் இரண்டாம் இடம் பிடித்தவரும் தமிழில் வெளியான உன்னாலே உன்னாலே படத்தில் ஹீரோயினாக நடித்திருந்தவருமான நடிகை தனீஷா முகர்ஜிக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது

தனீஷா முகர்ஜி தற்போது பொலிவுட் படங்களில் நடித்து வருகிறார். அதோடு சின்னத்திரை தொடர்களிலும், வெப் சீரிசிலும் நடித்து வருகிறார். ஹிந்தி பிக்பாஸ் 7-வது சீசனில் இரண்டாம் இடம் பிடித்தார்.

தனீஷா முகர்ஜி சில நாள்களாக காய்ச்சலுடன் அவதிப்பட்டு வந்தார். இதனால் அவர் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார். சோதனையின் முடிவில் அவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது "எனக்கு கோவிட் பொசிட்டிவ் உறுதி செய்யப்பட்டுள்ளது. உடனே வீட்டில் என்னை தனிமைப்படுத்திக் கொண்டேன். கடந்த சில நாள்களாக என்னிடம் தொடர்பில் இருந்தவர்கள் தங்களைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

மும்பை

கோரிக்கைகள் நிறைவேறும்வரை

பாரதிய ஜனதாவை தோற்கடிக்க வேண்டும்

'நம் கோரிக்கைகள் நிறைவேறும்வரை சட்டசபை தேர்தல்களில் பாரதிய ஜனதாவை தோற்கடிக்க வேண்டுமென மும்பை மாநாட்டில் விவசாய அமைப்பின் தலைவர் ராகேஷ் திகாயத் தெரிவித்தார்.

பாராளுமன்றக் குளிர்கால கூட்டத்தொடர் நேற்று (29) ஆரம்பமானது. இதையடுத்து மும்பையின் ஆசாத் மைதானத்தில் விவசாயிகள் அமைப்பான சம்யுக்தா ஷேத்காரி சங்கர் மோர்ச்சா தலைமையில் நேற்றுமுன்தினம் மாநாடு நடைபெற்றது.

இதில் பாரதிய கிசான் யூனியன் தலைவர் ராகேஷ் திகாயத் பேசியதாவது:

பிரதமர் நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக இருந்தபோது குறைந்தபட்ச ஆதரவு விலையை ஏற்றார். தற்போது அதற்கான விவாதத்தில் பங்கேற்க மறுக்கிறார். பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைக்க மத்திய அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். மின்சார திருத்த சட்டமூலத்தை திரும்ப பெற வேண்டும். லக்கிம்பூரில் விவசாயிகள் கொலை வழக்கில்

மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவை கைது செய்ய வேண்டும்.

ஓராண்டு போராட்டத்தில் பலியான விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதி வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்தப்படும். கோரிக்கைகள் ஏற்கப்படும்வரை அனைத்து சட்டசபை தேர்தல்களிலும் பாரதிய ஜனதாவை தோற்கடிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார்.

'பீஸ்ட்' 100 ஆவது நாள் படம் வெளியானது

பீஸ்ட் படத்தின் 100வது நாள் படப்பிடிப்பு என்று கூறி விஜய் இருக்கும் புகைப்படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார் நெல்சன் திலீப்குமார். நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் பீஸ்ட் படத்தில் விஜய் நடித்து வருகிறார்.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் பீஸ்ட் படத்தின் ஷூட்டிங் நடைபெற்று வருகிறது.

ஷூட்டிங் நடைறெ;ற இந்த 100 நாட்களும் அருமை என்று கூறி பீஸ்ட் படப்பிடிப்பு தளத்தில் அதுவும் விஜய் இருக்கும் புகைப்படத்தை ட்விட்டரில் வெளியிட்டுள்ளார் நெல்சன் திலீப்குமார். அந்த புகைப்படத்தை பார்த்து மகிழ்ந்துள்ளனர் ரசிகர்கள்.

பீஸ்ட் ஹீரோயின் பூஜா ஹெக்டேவை விட புகைப்படத்தில் இருக்கும் மற்றொரு பெண் விஜய்க்கு ஏற்ற ஜோடியாக தெரிகிறார். யார் அந்த பெண் என்று பலரும் நெல்சன் திலீப்குமாரிடம் கேட்டிருக்கிறார்கள்.

பீஸ்ட் படப்பிடிப்பை டிசெம்பர் மாதம் முடிக்க திட்டமிட்டிருக்கிறார் நெல்சன். படத்தை 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரிலீஸ் செய்யவும் முடிவு செய்துள்ளனர்.

'மன்மதராசா' பாடல் டான்ஸ்மாஸ்டர்

கொரோனாவால் உயிரிழந்தார்

கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த பிரபல டான்ஸ் மாஸ்டர் சிவசங்கர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தனுஷின் திருடா திருடி படத்தில் வந்த மன்மத ராசா பாடலுக்கான டான்ஸை எளிதில் மறந்துவிடமுடியாது. அந்த பாடலுக்கு டான்ஸ் சொல்லிக் கொடுத்த சிவசங்கர் மாஸ்டருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரின் நுரையீரல் 75 சதவீதம் பாதிக்கப்பட்டதால் கவலைக்கிடமான நிலையில் இருந்தார். சிகிச்சைக்கு தினமும் ரூ. 2.5 இலட்சம் செலவாகிறது. அதை சமாளிக்க முடியவில்லை என்று கூறி அவரின் இளைய மகன் அஜய் நிதியுதவி கேட்டார்.

இதையடுத்து நடிகர்கள் சிரஞ்சீவி, தனுஷ், சோனு சூத் ஆகியோர் உதவி செய்தார்கள். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி சிவசங்கர் மாஸ்டர் உயிரிழந்தார்.

அவரின் மரணச் செய்தி அறிந்த பிரபலங்களும், ரசிகர்களும் கவலை அடைந்துள்ளனர். இந்தக் கொரோனா இன்னும் எத்தனை பேரின் உயிரை வாங்கப் போகிறதோ என்கிறார்கள் ரசிகர்கள். சிவசங்கர் மாஸ்டரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வதாக பலரும் சமூக வலைதளங்களில் தெரிவித்துள்ளனர்.

சிவசங்கர் மாஸ்டரின் மனைவி மற்றும் மூத்த மகனும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் மூத்த மகனின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

ராணிமுகர்ஜி மகிழ்ச்சி

கமலின் வார்த்தை என் சினிமா வாழ்க்கையையே புரட்டி போட்டது என்று பிரபல நடிகை நடிகை ராணி முகர்ஜி நெகிழ்ச்சியடைகிறார்.

பொலிவுட் சினிமாவில் உச்ச நட்சத்திரமாக வலம் வரும் நடிகை ராணி முகர்ஜி திரைத்துறையில் தனது 25 ஆண்டுகாலத்தை நிறைவு செய்துள்ளார்.

இவர் கலைத்துறையில் புரிந்த சாதனைகளுக்காக பல பாராட்டுக்கள் உட்பட ஏழு ஃப்ல்ம்பெயார் விருதுகளைப்னெற்றுள்ளார்.

இவர் திரைத்துறையில் 25 ஆண்டுகாலத்தை நிறைவு செய்துள்ளதை யொட்டி அவர் அளித்த பேட்டியில் கலைத்துறையில் தனது வளர்ச்சிக்கு நடிகர் கமல்ஹாசன் போன்ற உச்சநட்சத்திரங்கள் கூறிய ஊக்கமான வார்த்தைகள்தான்காரணம் என்று தெரிவித்துள்ளார்.

தனக்கு சோதனை

இயக்குநர் கவலை

எனக்கு ஏன் இந்த சோதனை? இதெல்லாம் சமூக விரோதிகளின் சதியாகத்தான் இருக்கும் என்று விமர்சகரும் இயக்குநருமான ப்ளூ சட்டை மாறன் ட்வீட் போட்டுள்ளார்.

சிறுத்தை சிவா இயக்கத்தில் ரஜினிகாந்த், நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், குஷ்பு, மீனா உள்ளிட்டோர் நடித்த அண்ணாத்த படம் தீபாவளி பண்டிகை ஸ்பெஷலாக நவம்பர் 4ஆம் திகதி ரிலீஸானது. படம் ரிலீஸான வேகத்தில் ரூ. 200 கோடி வசூல் செய்தது.

தமிழகத்தில் மட்டும் ரூ. 150 கோடி வசூலித்தது. அண்ணாத்த படம் ரிலீஸானபோதே அதை விமர்சித்திருந்தார் விமர்சகரும், இயக்குநருமான ப்ளூ சட்டை மாறன். இந்நிலையில் அவர் போட்டுள்ள ட்வீட்டில்;

'ரிலீஸ் சமயத்துல கனமழை வந்து வசூலை காலி பண்ணிடுச்சி. அப்பறம் ஜெய் பீம் சர்ச்சைல என் படத்தை யாரும் கண்டுக்கல. தீபாவளிக்கு மாநாடு வந்துருந்தா என் கதி?

சிம்புவுக்கு கூட ஹிட் படம் கெடச்சிருச்சி. எனக்கு ஏன் இந்த சோதனை? இதெல்லாம் சமூக விரோதிகளின் சதியாகத்தான் இருக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஜினியின் பாராட்டு எஸ்.ஜே.சூர்யாவுக்கு

மிகப்பெரிய விருதாம்

ரஜினியின் பாராட்டை தனக்குக் கிடைத்த மிகப்பெரிய விருது என்று பெருமிதமடைகிறார் எஸ்.ஜே.சூர்யா.

வெங்கட்பிரபு இயக்கத்தில் சிம்பு, கல்யாணி பிரியதர்ஷன், எஸ்.ஜே.சூர்யா உள்பட பலர் நடித்துள்ள மாநாடு படம் கடந்த 25ஆம் திகதி திரைக்கு வந்தது. யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ள இப்படம் இரண்டு நாளில் ரூ.14 கோடி வசூலித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நடிகர் ரஜினிகாந்தும் மாநாடு படத்தைப்பார்த்து விட்டு தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். குறிப்பாக, இயக்குநர் வெங்கட்பிரபு, சிம்பு, எஸ்.ஜே.சூர்யா ஆகியோருக்கு போன் செய்து வாழ்த்தியிருக்கிறார் ரஜினி.

சென்னை

பழனிசாமிக்கும் பன்னீர்செல்வத்துக்கும் அதேபொறுப்பு

அ.தி.மு.கவில் அதிரடி மாற்றங்கள்

அண்ணா திராவிட முன்னேற்ற கழக செயற்குழு கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வழிகாட்டி குழு கலைப்பு உட்பட, கட்சியில் பல அதிரடி மாற்றங்களை நிகழ்த்தும் வகையிலான தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

சென்னை, ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க, தலைமை அலுவலகத்தில், அக்கட்சியின் செயற்குழு கூட்டம், டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

அப்போது, அ.தி.மு.க, ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வமும் இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமியும் தொடர்ந்து அவர்களது பொறுப்புகளில் நீடிப்பதற்கான அங்கிகாரம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், கட்சியில் ஒருவருக்கு ஒரு பதவி என்ற முறையும் அமலாகிறது. அதனால், ஒருங்கிணைப்பாளர் பன்னீர் செல்வம் தன்னிடம் உள்ள பொருளாளர் பதவியையும், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி, தலைமை நிலைய செயலர், மாவட்ட செயலர் பதவியையும் இராஜினாமா செய்கின்றனர்.

கொச்சி

அழகிகள் பலியான வழக்கில் திருப்பம்

கேரளாவில், 2019 ஆம் ஆண்டு அழகி போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த 'மொடல்' அழகிகள் கொச்சியில் நடந்த கார் விபத்தில் பலியாயினர்.

விபத்தின்போது, அவர்களை காரில் பின்தொடர்ந்தவரை பொலிஸார் கைது செய்தனர். கேரளாவின் கொச்சியிலுள்ள ஹோட்டலில் கடந்த மாதம் 31ஆம் திகதி இரவு விருந்து நிகழ்ச்சி நடந்தது.

இதில் கேரள அழகியாக தேர்வான அன்ஷி கபீர் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த அஞ்சனா ஷாஜன் ஆகிய 'மொடல்' கள் பங்கேற்றனர். விருந்து முடிந்தும் வீட்டிற்கு காரில் சென்றனர். அப்போது கார் கவிழ்ந்து இருவரும் பலியாகினர்.

முன்னால் சென்ற பைக் மீது மோதாமல் இருக்க திரும்பியபோது, கார் கவிழ்ந்ததாக பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். இதற்கிடையே விபத்துக்கு முன், அந்த இரு பெண்களின் காரை சந்தேகப்படும் வகையில் ஒரு கார் பின்தொடர்ந்தது தெரியவந்தது. இதுகுறித்து பொலிஸார் விசாரணையை நடத்தினர். இதில், விருந்து நடந்த ஹோட்டல் கெமராவில் பதிவான காட்சிகள் விபத்துக்குப் பின் அழிக்கப்பட்டது தெரியவந்தது. அதற்கு காரணமான ஹோட்டல் முகாமையாளர் ராய் வயலட் கைதானார்.

புதுடெல்லி

சர்வதேச விமான சேவை:

மீண்டும் தொடங்குவது தொடர்பாக மறுபரிசீலனை

ஒமைக்ரோன் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சர்வதேச விமான சேவையை மீண்டும் தொடங்குவது தொடர்பாக மத்திய அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவுள்ளது. இதனால் சேவை தொடங்கும் திகதி தள்ளிப்போகும் எனத் தெரிகிறது.

கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக, கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி முதல் சர்வதேச விமானப் போக்குவரத்தை இந்தியா நிறுத்தியது. 'ஏர் பபுள்' என்ற கொரோனா தடுப்பு விதிகளுடன் 25 நாடுகளுக்கு மட்டும் விமான சேவையை இயக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது தொற்று பரவல் குறைந்த நிலையில் இந்தியாவில் இருந்து டிசெம்பர் 15ஆம் திகதி முதல் வெளிநாடுகளுக்கு மீண்டும் பயணிகள் விமான சேவை தொடங்க மத்திய விமான போக்குவரத்து துறை முடிவு செய்திருந்தது.

புதுடெல்லி

திரிபு கொரோனாவைத் தடுக்க

அரசாங்கம் என்ன செய்ய போகிறது?

புதுவகை கொரோனா வைரஸைத் தடுக்க மத்திய அரசாங்கம் என்ன செய்ய போகிறது என உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

காற்று மாசு தொடர்பான வழக்கின்போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா, "புதுவகை கொரோனா புதிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. இதனைத் தடுக்க மத்திய அரசாங்கம் என்ன செய்ய போகிறது?" எனக் கேள்வி எழுப்பினார்.

புதுடெல்லி

வேளாண் சட்டங்கள்:

சட்டமூலம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது

மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப் பெறும் சட்டமூலம் மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் கரவொலியுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மத்திய அரசாங்கம் கொண்டு வந்த 3 வேளாண் சட்டங்களை எதிர்த்து புதுடெல்லியில் விவசாயிகள் கடந்த ஓராண்டாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். மத்திய அரசு பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் முடிவு எட்டப்படவில்லை.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று (29) தொடங்கி டிசெம்பர் 23 ஆம் திகதி வரை நடக்க உள்ளது. கூட்டத்தொடரின் முதல் நாளில் 3 வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வகை செய்யும் சட்டமூலம் தாக்கல் செய்யப்படும் என மத்திய அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்து இருந்தது.

அதன்படி 3 வேளாண் சட்டங்களை திரும்பப் பெறும் சட்மூலத்தை மத்திய விவசாயத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மக்களவையில் தாக்கல் செய்தார்.

ஜேர்மனி

அதிகரிக்கும் கொரோனா:

மீண்டும் முழு ஊரடங்கு?

அதிகரிக்கும் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக ஜேர்மனியில் மீண்டும் முழு ஊரடங்கு அமல் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில், கடந்த சில நாள்களாக, கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகின்றது. குறிப்பாக, கடந்த ஏழு நாள்களில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும்

அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதனைக் கட்டுப்படுத்த அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. அந்தவகையில் நாட்டில் உள்ள அனைவருக்கும் விரைவில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுமென என அந்நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான் தெரிவித்துள்ளார்.

மேலும் நாடு முழுவதும் ஊரடங்கை அமல்படுத்துவது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உகண்டா

சீனாவிடம் பெற்ற கடனுக்கான

விமான நிலையத்தை இழக்கும் நாடு

சீனாவிடம் வாங்கிய கடனுக்காக உகாண்டா அரசு தனது சர்வதேச விமான நிலையத்தை இழக்கும் அபாயத்தில் உள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

வறிய நாடுகளில் ஒன்றான உகாண்டா கடந்த 2015ஆம் ஆண்டு அந்நாட்டிலுள்ள ஒரே ஒரு சர்வதேச விமான நிலையமான எண்டெபெ (Entebbe) விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக சீனாவின் எக்ஸிம் பொதுத்துறை வங்கியிடம் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது.

எனினும் 20 ஆண்டிற்குள் அக் கடனை 2 % வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் என்றும், கடனை செலுத்த தவறினால் அந்நாட்டில் உள்ள அரசு சொத்துகள் அடமானமாக பெறப்படும் என்றும், எண்டெபெ விமான நிலையத்தை எந்த சர்வதேச பாதுகாப்பும் இல்லாமல் ஒப்படைக்க வேண்டும் என்றும் சீன அரசு விதிமுறை விதித்திருந்தது.

இந்நிலையில் உகாண்டாவின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்து வருவதால் சீனாவிடம் தனது சர்வதேச விமான நிலையத்தை இழக்கும் அபாயம் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் உகாண்டாவின் நிதியமைச்சர் இக்கடன் ஒப்பந்தத்தில் தவறு செய்துவிட்டதாக கூறி நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனா

சமூக வலைதளத்தில்

தற்பெருமை பேசத் தடை

அதிகளவான பணம், செல்வம், ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றை வைத்து தற்பெருமை பேசுவதற்கு சீனாவைச் சேர்ந்த பிரபல சமூக வலைதளமான ஷொஹோங்ஷு (Xiaohongshu) தடை விதித்துள்ளது

ஆரோக்கியமான ஒன்லைன் படைப்புகளை ஊக்குவிக்கும் விதமாகவே இந்த நடவடிக்கையை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆடம்பரப் பொருட்கள், பணத்தை வைத்து சுய பெருமை பேசிய 8,700 பதிவுகள் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 240 கணக்குகளுக்கு தண்டனை வழங்கியுள்ளதாகவும், ஆரோக்கியமற்ற ஒன்லைன் சூழலை உருவாக்கும் பதிவுகளுக்கு எதிராக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரு

பெருவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

இடிந்து விழுந்த தேவாலய கோபுரம்

தென் அமெரிக்க நாடான பெருவில் நேற்று முன்தினம் (28) சக்தி வாய்ந்த நில நடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

கடற்கரை நகரமான பரான்காவுக்கு சுமார் 42 கி.மீ. தொலைவில் ஏற்பட்ட இந்நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 7.5 ஆகப் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிலநடுக்கத்தின் அதிர்வுகள் காரணமாக, கட்டடங்கள் பல குலுங்கியதாகவும் சில கட்டடங்கள் இடிந்து விழுந்ததாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக கடந்த 16-ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த தேவாலயத்தின் கோபுரமானது இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனினும் இந்நிலநடுக்கத்தினால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து

கஞ்சா பீட்சா

தாய்லாந்தில் உள்ள பிரபல உணவகமொன்று கிரேசி ஹப்பி பீட்சா (Crazy Happy Pizza) என்ற கஞ்சா சேர்த்து தயாரிக்கப்பட்ட பீட்சாவினை அறிமுகப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற தாம் யெம் சூப்பின் சுவை கொண்ட இவ் வகை பீட்சாவில் நன்கு வறுக்கப்பட்ட கஞ்சாவும் சேர்த்து வாடிக்கையாளர்களுக்கு பரிமாறப்படும் எனக் கூறப்படுகின்றது.

மேலும் வாடிக்கையாளர்கள் விருப்பப்பட்டால் கூடுதலாக இரண்டு முதல் மூன்று கஞ்சா இலைகள் சேர்த்து வழங்கப்படும் எனவும் அதற்கு சற்று கூடுதலாக பணம் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து

சைக்கிளில் சென்று குழந்தை பெற்ற எம்பி

நியூசிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினரான ஜூலி அன்னே ஜெண்டர், என்பவர் வைத்தியசாலைக்கு சைக்கிளில் சென்று குழந்தை பிரசவித்த சம்பவம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், அவர் வைத்தியசாலைக்குச் சென்ற ஒரு மணி நேரத்திலேயே அவருக்கு குழந்தை பிறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது குறித்து தனது பேஸ்புக் பக்கத்தில், "முக்கியமான செய்தி! இன்று அதிகாலை 3.04 மணியளவில் எங்கள் குடும்பத்தின் புதிய உறுப்பினரை நாங்கள் வரவேற்றுள்ளோம். பிரசவத்தின்போது சைக்கிளை ஓட்ட உண்மையிலேயே நான் திட்டமிடவில்லை. ஆனால், அப்படி நடந்து முடிந்துவிட்டது.

நாங்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்காக அதிகாலை 2 மணிக்குச் எழுந்தபோது என் பிரசவ வலி அவ்வளவு மோசமாக இல்லை. எங்கள் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குச் செல்ல 2-3 நிமிடங்கள் ஆகும். இருந்தபோதிலும், அங்கு சென்று 10 நிமிடங்களிலேயே பிரசவ வலி அதிகரித்தது. ஆச்சரியப்படும் விதமாக இப்போது எங்களிடம் நல்ல

ஆரோக்கியமான, மகிழ்ச்சியான குழந்தை உள்ளது. அவளின் தந்தையை போலவே" என பதிவிட்டுள்ளார்.

அவர், கடந்த 2018ஆம் ஆண்டும், இது போன்றே சைக்கிளில் சென்று தனது முதல் குழந்தையை பெற்று கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதிகரிக்கும் கொரோனா:

தோல்வியைத் தவிர்த்த நியூசிலாந்தை

இந்தியாவுக்குக்கு எதிரான முதலாவது டெஸ்டில் தோல்வியை நியூசிலாந்து தவிர்த்துள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், கான்பூரில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை ஒரு விக்கெட் இழப்புக்கு நான்கு ஓட்டங்களைப் பெற்றவாறு தமது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து, டொம் லேதம், வில் சோமர்வில் மூலம் நிதானமாகத் தடுத்தாடியது.

இந்நிலையில், 36 ஓட்டங்களுடன் சோமர்வில் ஆட்டமிழந்தபோதும், அடுத்து வந்த அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன் தடுத்தாடிய வண்ணம் இருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் இரவீந்திர ஜடேஜாவிடம் லேதம் வீழ்ந்த நிலையில், அடுத்து வந்த றொஸ் டெய்லர், ஹென்றி நிக்கொல்ஸ் ஆகியோர் உடனேயே ஜடேஜா, அக்ஸர் பட்டேலிடம் வீழ்ந்திருந்தனர்.

சிறிது நேரத்தில் ஜடேஜாவிடம் 24 ஓட்டங்களுடன் வில்லியம்ஸ் வீழ்ந்த நிலையில், குறிப்பிட்ட நேரத்தின் பொன்னர் டொம் பிளன்டலும் அஷ்வினிடம் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த கைல் ஜேமிஸன், டிம் சௌதி ஆகியோரும் ஜடேஜாவிடம் வீழ்ந்தபோதும், றஷின் றவீந்திராவும், அஜாஸ் பட்டேலும் களத்தில் நிலைத்து நின்று நியூசிலாந்தின் தோல்வியைத் தவிர்த்திருந்தனர். நேற்றைய

ஐந்தாம் நாள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றிருந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷ்ரேயாஸ் ஐயர் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 345/10

(துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் 105, ஷுப்மன் கில் 52, இரவீந்திர ஜடேஜா 50, இரவிச்சந்திரன் அஷ்வின் 38, அஜின்கியா ரஹானே 35, செட்டேஸ்வர் புஜாரா 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 5/69, கைல் ஜேமிஸன் 3/91, அஜாஸ் பட்டேல் 2/90)

நியூசிலாந்து: 296/10

(துடுப்பாட்டம்: டொம் லேதம் 95, வில் யங்க் 89 ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 5/62, இரவிச்சந்திரன் அஷ்வின் 3/82, உமேஷ் யாதவ் 1/50, இரவீந்திர ஜடேஜா 1/57)

இந்தியா: 234/7 (துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் 65, ரித்திமான் சஹா ஆ.இ 61, இரவிச்சந்திரன் அஷ்வின் 32, அக்ஸர் பட்டேல் ஆ.இ 28, செட்டேஸ்வர் புஜாரா 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: கைல் ஜேமிஸன் 3/40, டிம் சௌதி 3/75, அஜாஸ் பட்டேல் 1/60)

நியூசிலாந்து: 165/9

(துடுப்பாட்டம்: டொம் லேதம் 52, வில் சோமர்வில் 36, கேன் வில்லியம்ஸன் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 4/40, இரவிச்சந்திரன் அஷ்வின் 3/35, அக்ஸர் பட்டேல் 1/23, உமேஷ் யாதவ் 1/34)

போட்டியின் நாயகன்: ஷ்ரேயாஸ் ஐயர்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

2ஆவது டெஸ்டில் இலங்கை நிதானமான ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இலங்கை நிதானமான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

காலியில் நேற்று ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய துஷ்மந்த சமீரவை பிரதியிட்ட சரித் அஸலங்க டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக ஷனொன் கப்ரியல், ரஹீம் கொர்ன்வோலை கேமார் றோச், வீராசாமி பெருமாள் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர்.

முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் இலங்கை பெற்றுள்ளது. தற்போது களத்தில், பதும் நிஸங்க 61, ஒஷாத பெர்ணான்டோ 2 ஓட்டங்களுடன் கருணாரத்ன 42 ஓட்டங்களுடன் றொஸ்டன் சேஸிடம் வீழ்ந்திருந்தார்.

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

வெற்றியை நோக்கி பாகிஸ்தான்

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி பாகிஸ்தான் பயணிக்கிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், சட்டோகிராமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த டெஸ்டின் நேற்றைய நான்காம் நாளை 4 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றவாறு தமது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ், ஆரம்பத்திலேயே ஹஸன் அலியிடம் முஷ்பிக்கூர் ரஹீமை இழந்திருந்தது.

பின்னர் யாசிர் அலியும், லிட்டன் தாஸும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில், பந்து தலையில் தாக்கிய அலி அதிர்ச்சி காரணமாக 36 ஓட்டங்களுடன் போட்டியிலிருந்து விலகினார். தொடர்ந்து வந்த மெஹிடி ஹஸன் மிராஸ் மற்றும் அலியைப் பிரதியிட்ட நுருல் ஹஸன் ஆகியோர் சஜிட் கானிடம் குறிப்பிட்ட நேரத்தில் வீழ்ந்தனர்.

கடைசியாக 59 ஓட்டங்களுடன் ஷகீன் ஷா அஃப்ரியிடம் தாஸும் வீழ்ந்த நிலையில், தஜியுல் இஸ்லாம் சிறிது நேரத்தில் சஜிட் கானிடமும், அபு ஜயெட் அஃப்ரியிடமும் உடனேயே விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களையே தமது இரண்டாவது இனிங்ஸில் பங்களாதேஷ் பெற்றது.

இந்நிலையில், 202 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு

தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான், நேற்றைய நான்காம் நாள் ஆட்டமுடிவில் விக்கெட் இழப்பின்றி 109 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், அபிட் அலி 56, அப்துல்லா ஷஃபிக் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் காணப்படுகின்றனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 330/10

(துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 114, முஷ்பிக்கூர் ரஹீம் 91, மெஹிடி ஹஸன் மிராஸ் ஆ.இ 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் அலி 5/51, பாஹீம் அஷ்ரப் 2/54, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/70, சஜிட் கான் 1/79)

பாகிஸ்தான்: 286/10

(துடுப்பாட்டம்: அபிட் அலி 133, அப்துல்லா ஷஃபிக் 52, பாஹீம் அஷ்ரப் 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 7/116, எபொடொட் ஹொஸைன் 2/47, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/68)

பங்களாதேஷ்: 157/10

(துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 59, யாசிர் அலி 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 5/32, சஜிட் கான் 3/33, ஹஸன் அலி 2/52)

பாகிஸ்தான்: 109/0

(துடுப்பாட்டம்: அபிட் அலி ஆ.இ 56, அப்துல்லா ஷஃபிக் ஆ.இ 53 ஓட்டங்கள்)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 30 நவம்பர் 2021, இல. 08, ஹுனுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.